REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/Thinakaran.lk /ThinakaranLK

2024 ஜனவரி 2 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN

තිනකරන්

வரு. 92 இல. 02 | Tuesday 02, January, 2024 | 12 பக்கங்கள் | 50/-




## கிழக்கு மாகாண வளர்ச்சி மேம்பாட்டுக்கு ஆளுநர் நிதி

### 48,223 மில்லியன் நிதி ஒதுக்கி ஒப்பம்



கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மாகாண வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக 48 ஆயிரத்து 223 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

இந்நிதியை ஒதுக்கீடு செய்யும் ஆவணத்தில் ஆளுநர் கையொப்பம் இட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.மாகாணத்தின் புத்தாண்டு அபிவிருத்திகளுக்கென 101 நலத்திட்டங்களையும் அவர் ஆரம்பித்து வைத்துள்ளார்.

(விரிவான செய்தி 8ஆம் பக்கம்)

## ஜனாதிபதியின் யாழ். விஜயத்தில் முக்கிய அறிவிப்புக்கள்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இம்மாதம் 4, 5, 6 ஆம் திகதிகளில் வட மாகாணத்திற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.இது குறித்து நம்பத்தகுந்த அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யாழ்ப்பாணம் செல்லும் ஜனாதிபதி யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ள மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்திலும் பங்கேற்கவுள்ளார். இதன்போது காணி விடுவிப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் சம்பந்தமான முக்கிய அறிவிப்புக்களையும் அவர் வெளியிடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து வடக்கு மக்களின் நீண்டகால குடிநீர்ப் பிரச்சினைக்கு தீர்வுகாணும் பொருட்டு 250 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டில் கொண்டுவரப்பட்ட பாலியாற்று நீர் வழங்கல் திட்டத்தை ஜனாதிபதி ஆரம்பித்து வைப்பார்.

இத்திட்டம் தொடர்பில் கடந்த காலங்களில்

04

## 2024: சரியான தீர்மானங்களுடன் துரித வளர்ச்சிக்கு வித்திடுவோம்

### விமானப்படை தலைமையகத்தை திறந்து வைத்து ஜனாதிபதி உரை



சரியான தீர்மானங்களுடன் இவ்வருடத்திற்குள் நாட்டை துரித பொருளாதார அபிவிருத்தியை நோக்கி கொண்டு செல்ல உள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார்.

பத்தரமுல்லை அக்குரேகொடவில் புதிய விமானப் படைத் தலைமையகக் கட்டடத்தை நேற்று (01) திறந்துவைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

விமானப் படைத் தலைமையகத்திற்குச் சென்ற முப்படைகளின் தளபதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு படையினரின் அணிவகுப்பு மரியாதையுடன் வரவேற்பளிக்கப்பட்டது.

04

# பணவீக்கத்தை தனி பெறுமதியில் பேணுவதால் வர்த்தக சமூகம் நம்பிக்கை

### வெளிநாட்டு கையிருப்புக்களை பேணுவதில் உறுதி - நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க



நாட்டின் பணவீக்கத்தை தனி பெறுமதியில் பேணுவதால், வர்த்தக சமூகத்தினர் மத்தியில் நம்பிக்கையை கட்டியெழுப்ப முடிந்திருப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

2023ஆம் ஆண்டு, மொத்த தேசிய உற்பத்திக்கு நிகராக 11.2% காணப்படுவதாகவும் 2026 ஆம் ஆண்டில் அதனை 15% வரையில் அதிகரித்துக்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (01) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே, நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க,

நாட்டின் பொருளாதார வளர்ச்சி 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 1.7% ஆக இருந்தது. அது 2023 இல் முழுமையான பொருளாதார வளர்ச்சியில் மறை 3% ஆகும். இதன்படி, 2022 இல் முழுமையான பொருளாதார வளர்ச்சி 11% ஆகும்.

மேலும் முதன்மை கணக்கு இருப்பு தொடர்ந்தும் நேர்மறை பெறுமானத்தில் உள்ளது. 2022 ஆம் ஆண்டில், இது 895 பில்லியன் ரூபா எதிர்மறை பெறுமானத்தில் இருந்தது. இது நவம்பர் மாத நிலவரப்படி 333 பில்லியன் ரூபா என்ற நேர்மறையான எண்ணிக்கையாக உள்ளது.

மேலும், சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது தவணையைப் பெற்ற பின்னர், வெளிநாட்டுக் கையிருப்பு 04 பில்லியன் அமெரிக்க டொலர்களைத் தாண்டியுள்ளது. சர்வதேச நாணய நிதியத்திலிருந்து 337 மில்லியன் அமெரிக்க டொலர்கள், ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 220 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மற்றும் உலக வங்கியிடமிருந்து 250 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைத்துள்ளன.

மேலும் பணவீக்கத்தை ஒற்றை இலக்கத்தில் பேணவும் முடிந்துள்ளது. 2022 இல் பணவீக்கம் 70% ஆக இருந்தது. இது

04

## 97 பொருட்கள், சேவைகளுக்கு 18 வீத புதிய வற் வரி அமுல்

### விலைகள் மற்றும் கட்டணங்களிலும் மாற்றம்




வரி விலக்களிக்கப்பட்டு வந்த 97 பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு நேற்று (01) முதல் வற் எனப்படும் பெறுமதி சேர் வரி அறவிடப்படுகிறது.

138 பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு நேற்று முன்தினம் வரை (31) பெறுமதி சேர் வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டு வந்தது. அரசாங்க வருமானத்தை மேலும் அதிகரிக்கும் நோக்கில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய வற் திருத்தச் சட்டத்துக்கமைய, 15 வீதமாக இருந்த வற் வரி நேற்று (01) 18 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி, சகல பொருட்கள் மற்றும்

04

## சமூக பொலிஸ் குழுக்களை வலுப்படுத்த கனடா ஒத்துழைப்பு

### கனடா பீல் பிராந்திய பொலிஸ் பிரதானி நிஷான் துரையப்பா



இலங்கையின் சமூக பொலிஸ் குழுக்களை மேலும் வலுப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதாக, கனடாவின் பீல் பிராந்தியத்தின் பொலிஸ் பிரதானி நிஷான் துரையப்பா தெரிவித்துள்ளார்.

04

## வற்வரி; போலி பிரசாரங்களை முன்னெடுத்தால் நடவடிக்கை

வற் வரி திருத்தம் தொடர்பில் பல்வேறு தரப்பினரால் மக்கள் மத்தியில் தவறான கருத்துக்கள் சமூகமயப்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதியின் பணிப்பாளர் பிரதானி சாகல ரத்நாயக்க, வரித் திருத்தம் தொடர்பில் பொய்யான அறிக்கைகளை வெளியிடும் தரப்பினருக்கு எதிராக, கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்துள்ளார்.

“மக்கள் அரசாங்கத்துடன் உண்மையாக உழைக்க வேண்டும். அரசாங்கம் மக்களுடன் உண்மையாக உழைக்க வேண்டும். அதுதான் மிக முக்கியமான விடயமாகும். அரசியல் பேதங்களை

04

## 2024: வாக்காளர் பதிவு நேற்று முதல் ஆரம்பம்

### தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை




வாக்காளர்களை பதியும் (2024) நடவடிக்கைகள் நேற்று (01) ஆரம்பமாகியுள்ளன. தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க இதற்கான அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

2024 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் பதிவு நடவடிக்கைகளை பெப்ரவரி முதலாம் திகதி ஆரம்பிக்க திட்டமிடப்பட்டிருந்தது. இந்த ஆண்டில் 2024 ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளதால், இது தொடர்பான

04

## சீரற்ற காலநிலை 14,700 பேர் பாதிப்பு

### கிழக்கில் அதிகளவு பாதிப்புக்கள்

நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக நாடளாவிய ரீதியில் நான்காயிரத்து 432 குடும்பங்களைச் சேர்ந்த 14,700 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.


அனர்த்த முகாமைத்துவ நிலையம் வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கிழக்கு மாகாணத்திலே அதிகளவிலான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

04

## ஜப்பானை உலுக்கிய பாரிய பூகம்பம்; 7.4 ரிக்டரில் பதிவு

### கிராமங்களிலுள்ள மக்களை வெளியேற உத்தரவு



மேற்குப் பகுதியில் 7.4 ரிக்டர் அளவு கொண்ட சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

2024 புதிய ஆண்டு கொண்டாட்டங்கள் உலகம் முழுவதும் களைகட்டியிருந்த நிலையில், ஜப்பானில் 7.4 ரிக்டர் அளவுள்ள சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

04



## 03 வடக்கில் ஆறு மாதங்களுக்குள் போதைப்பொருள் ஒழிக்கப்படும்

குற்றச் செயல்களை கட்டுப்படுத்த அதிரடி ஏற்பாடுகள்

## குழந்தைகளுக்கு தடுப்பூசி ஏற்றும் திட்டம் ஜனவரி 06 இல்

### ஒன்பது மாவட்டங்களில் நடவடிக்கை



குழந்தைகளுக்கு அம்மை நோய்க்கான தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் ஜனவரி (06) முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது.

ஆறு முதல் ஒன்பது மாதங்களுக்கு இடைப்பட்ட குழந்தைகளுக்கு இத்தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

குழந்தைகள் மத்தியில் அம்மை நோய் அதிகளவில் பரவி வருவதால், முன்கூட்டிய பாதுகாப்பு கருதி இந்நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. காலை

04

## மாவட்ட கிளை உறுப்பினர்களை சந்தித்து சிறிதரன் எம்பி பேச்சு

### தலைமைக்கு போட்டியிடுவது குறித்து விளக்கம்



தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டக் கிளை உறுப்பினர்களை, பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் சந்தித்து பேசியுள்ளார்.

இச்சந்திப்பு

04

## லிட்ரோ சமையல் எரிவாயுவின் புதிய விலைகள் நேற்று அறிவிப்பு

### 12.5 கிலோ சிலிண்டரின் புதிய விலை ரூ. 4250




லிட்ரோ சமையல் எரிவாயு விலைகள் நேற்று முதல் (01) அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, 12.5 கிலோகிராம் சமையல் எரிவாயுவின் விலை 685 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனம்

04

## எரிபொருள் விலைகள் நேற்று முதல் அதிகரிப்பு

### மண்ணெண்ணெய் 11 ரூபாவல் குறைப்பு



எரிபொருட்களின் விலைகள் நேற்றிலிருந்து அதிகரித்துள்ளன. இதன்படி ஒக்டேன் 92 ரக பெற்றோல் 20 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு புதிய விலை 366 ரூபாவாக உயர்ந்துள்ளது.

ஒரு லீற்றர் 95 ஒக்டேன் ரக பெட்ரோலின் விலை 38 ரூபாவினால் உயர்த்தப்பட்டு புதிய விலை 464 ரூபாவாக விற்பனை செய்யப்படவுள்ளது.

04

### அரச மருத்துவமனைகளில்

## அலட்சியம் காட்டப்படுவதாக அறுநூறு முறைப்பாடுகள்



அரசாங்க மருத்துவமனைகளில் காட்டப்படும் அலட்சியங்கள் தொடர்பாக அறுநூறு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக, சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதில் மருத்துவர்கள் மற்றும் பிற சுகாதார ஊழியர்கள் அலட்சியமாக செயற்படுவது ஊழியர்களுக்கு பெரும்

04

# நகர்வலம்



# போதைப்பொருள் பாவனையை முற்றாக ஒழிப்பது தொடர்பாக ஊடக செயலமர்வு

## சிவில் அமைப்பு பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் பங்கேற்பு

**திறப்பனை தினகரன் அ .புரம் மேற்கு தினகரன் நிருபர்கள்)**

மதுபானம், புகையிலை மற்றும் போதைப் பொருள் பாவனையை முற்றாக குறைப்பதில் ஊடகங்கள் மற்றும் சமூக அமைப்புகளின் பங்களிப்பு குறித்து ஊடகவியலாளர்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளை தெளிவுபடுத்தும் ஊடக சந்திப்பொன்று அண்மையில் அநுராதபுரம் கிறிஸ்டன் பார்க் ஹோட்டலில் இடம்பெற்றது.

மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் மையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந் நிகழ்வில் 50க்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர். இதன் போது தற்போதைய நிலவரங்கள், போதைப்பொருள் பற்றிய சட்டங்கள் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், எதிர்கால சந்ததியினரை போதைப் பொருள் பாவனையின் ஆபத்தில் இருந்து பாதுகாக்க செய்ய வேண்டிய பங்களிப்பு என்ன என்பது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

மது மற்றும் போதைப் பொருள் தகவல் மையத்தின் திட்ட இயக்குநர் அமர்நாத் இதில் கலந்து கொண்டு விளக்கம் அளித்த போது; இலங்கையைப் பொறுத்த வரையில் மதுபானம் மற்றும் போதைப்பொருள் பாவனை செய்பவர்களை விட பயன்படுத்தாதவர்களே அதிகம். 18 வயதுக்கு மேல் எந்த போதை வஸ்துக்களையும் பயன்படுத்தாத 80% பேர் உள்ளனர். மேலும், சிகரெட் பயன்பாடு இப்போதைய நிலையில் வேகமாக குறைந்து வருகிறது. தற்போது, இது மொத்த மக்கள் தொகையில் 9.1% ஆகும். இன்று மது அருந்துபவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும், குறைவாகப் பயன்படுத்துபவர்கள் அதிகம் இருக்கின்றனர் என தெரியவருகின்றது.மேலும், இது புற்றுநோய் மற்றும் மாரடைப்புக்கு நேரடி பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.



மது மற்றும் புகையிலை மற்றும் இதர போதைப் பொருட்களின் வருமானம் நம் நாட்டிற்கு மிகச் சிறிய தொகையாகும், ஆனால் வெளிநாட்டு நிறுவனங்கள் இதன் மூலம் ஒரு நாளைக்கு சுமார் 100 கோடி வரை சம்பாதிக்கின்றன.

எமது நாட்டில் மதுபானம், சிகரெட் மற்றும் ஏனைய போதைப் பொருட்களின் வருமானத்தில் 84% பிரித்தானிய மற்றும் அமெரிக்க புகையிலை நிறுவனங்களுக்கே செல்கின்றன. நம் நாட்டில் மதுவினால் தினமும் 40 பேர் உயிரிழக்கின்றனர்.மேலும் நாட்டு வருமானத்தை விட இதற்கான செலவு அதிகமாகிறது.

அதனால் தான் மது மற்றும் புகை பிடித்தல் மற்றும் பிற போதைப் பொருட்களைத் தடுத்து, நாட்டில் பொருளாதார, சமூக மாற்றத்தை ஏற்படுத்த எம்மால் முடிந்த அனைத்து பங்களிப்பையும் நாம் செய்தல் வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

# மலர்ந்துள்ள புத்தாண்டு மாற்றங்களை தரட்டும்

## அமைச்சர் ஜீவன் தொண்டமான்



மலர்ந்துள்ள புத்தாண்டானது மாற்றங்களை தரும் ஆண்டாகவும், அதன் மூலம் நாடும் நாட்டு மக்களும் வளம்பெறும் ஆண்டாகவும் அமையட்டும் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

புத்தாண்டு வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. 2022 ஆம் ஆண்டானது இலங்கைக்கும் இலங்கை வாழ் மக்களுக்கும் வலிகள் தந்த ஆண்டாகவே அமைந்தது. வரிசை யுகம், பொருளாதார நெருக்கடி என பிரச்சினைகளைப் பட்டியலிடலாம். நாட்டில் அரசியல் ஸ்தீரமற்ற நிலையும் ஏற்பட்டது.

எனவே, நாட்டில் வரிசை யுகத்துக்கு முடிவுகட்டி, அரசியல் ஸ்தீரத்தன்மையை ஏற்படுத்தி, வங்குரோத்து நிலையில் இருந்து நாட்டை மீட்பதே எமது பிரதான இலக்காக இருந்தது. அதற்கான ஏற்பாடுகளை 2023 இல் செய்ய முடிந்தமை மகிழ்ச்சியளிக்கின்றது.

வரிசைகள் இன்றி புத்தாண்டை வரவேற்கக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது. மலர்ந்துள்ள புத்தாண்டிலாவது ஒன்றிணைந்து பயணிப்போம், நாட்டை மீட்க கரம்கோர்ப்போம்.

மலர்ந்துள்ள புத்தாண்டை உற்சாகத்துடன் கொண்டாடும் அனைவருக்கும் எனது இதயங்கனிந்த புத்தாண்டு நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

# இனிய நந்தவனம் 27 ஆம் ஆண்டு விழா தமிழ்நாட்டில்



தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளியிலிருந்து கடந்த 27 ஆண்டுகளாக வெளிவரும் இனிய நந்தவனம் மக்கள் மேம்பாட்டு மாத இதழின் 27 ஆம் ஆண்டு விழா எதிர்வரும் 7ஆம் திகதி திருச்சிராப்பள்ளியில் சிறப்பாக நடைபெறவுள்ளது. இவ்விழாவில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்கிறார்.

விஜிபி ஹவுசிங் பிரவேட் லிமிடெட் நிறுவனங்களின் துணைத்தலைவர் இரா. தங்கையா தலைமையில் நடைபெறும் விழாவில் தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், இனிய நந்தவனம் ஆலோசகர் மேஜர் டோனர் டாக்டர் கே.சீனிவாசன், புதுக்கோட்டை தமிழ்ச் சங்கத் தலைவர் கவிஞர் தங்கம்மூர்த்தி, துபாய் டெச்சீப் கம்பியூட்டர் டிரேடிங் நிர்வாக இயக்குநர் அப்துல் வஜீத், மனநல மருத்துவர் ஹேமப்பிரியா ஜெயபால், திருச்சி பாட்சா பிரியாணி சென்டர் உரிமையாளர் முகம்மது அபுபக்கர் சித்திக் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர். இனிய நந்தவனம் மக்கள் மேம்பாட்டு மாத இதழின் பிரதம ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகரன், இணையாசிரியர் பா.தென்றல் ஆகியோர் விழாவிற்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்

# லொறி பாதையை விட்டு விலகி விபத்து; இருவர் உயிரிழப்பு

**(ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்)**

கடுவனஹ’லந்த வீதியில் சென்று கொண்டிருந்த லொறியொன்று ருக்மல்பிடிய பிரதேசத்தில் பாதையை விட்டுவிலகிச்சென்று பாதை அருகே இருந்தமரம் ஒன்றுடன் மோதி ஏற்பட்ட விபத்தில் லொறியில் பயணித்த இருவர் உயிரிழந்து மேலும் இருவர் பாரிய காயங்களுக்குள்ளாகிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கடுவன பொலிஸார் (01) தெரிவித்தனர்.

இவ்விபத்தில் எம்பிலிபிடிய, லியனகம பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட மித்ரசேன மல்வத்தகே எனும் 64 வயது நபரும் சுராஜ் சம்பத் எனும் 45 வயது ஆகிய இருவருமே உயிரிழந்துள்ளனர். ஊருபொக்க நெலுவ பிரதேசத்திலிருந்து எம்பிலிபிடிய நோக்கி வருகைதந்து கொண்டிருந்தபோதே அதிகாலை 2 மணியளவில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# புத்தசாசன சமய விவகார அமைச்சில் புதுவருட நிகழ்வு





**ஏ.எஸ்.எம்.ஜாவித்**

புதுவருடத்தில் அரச நிறுவன ஊழியர்களின் கடமைகளை ஆரம்பிக்கும், உறுதியெடுக்கும் நிகழ்வுகள் நேற்று (01) அரச நிறுவனங்களில் நடைபெற்றது.

இந்த வகையில் புத்தசாசன சமய மதவிவகார அமைச்சின் கீழ் வரும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் கிறிஸ்தவ அலுவல்கள் திணைக்களம் ஆகியன ஒன்றிணைந்து தற்போது ஒரே கட்டிடத் தொகுதியில் இயங்குவதால் வரலாற்றில் முதல் முறையாக மேற்குறித்த மூன்று திணைக்களங்களும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரின் தலைமையில் இந்து கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் வை. அநிருத்தினன், கிறிஸ்தவ அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சத்துரி பின்டோ ஆகியோரின் ஒத்துழைப்புடன் நான்கு சமயத் தலைவர்களினதும் பங்குபற்றுதலுடன் சத்திய உறுதி நிகழ்வு கொழும்பிலுள்ள அமைச்சின் அலுவலகத்தில் இடம்பெற்றது. இதில் ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

# மலர்ந்துள்ள புத்தாண்டு இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தட்டும்

## புத்தாண்டு செய்தியில் மனோ கணேசன்



மலர்ந்துள்ள புத்தாண்டு வழமைபோல வரும் புது வருடம் அல்ல. ஆகவே வாழ்த்துகளும், எதிர்பார்ப்புகளும் கூட வழமை போல் இருந்திட முடியாது. “இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு”, என்ற இன்றைய அடையாளத்தில் இருந்து, “இலங்கை ஒரு சிங்கள, தமிழ், முஸ்லிம் நாடு”, “பௌத்த, இந்து, இஸ்லாமிய, கத்தோலிக்க நாடு” என்ற அடையாளங்களை நோக்கி பயணிப்போம் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது;

“அரகல” என்ற கிளர்ச்சிக்கு பிறகு நாட்டில் ஊழலில் ஈடுபடும் திருடர்களை அரசியலில் இருந்து நிரந்தரமாக விரட்டும் கொள்கை மேலோங்கி இருக்கும் காலம் இதுவாகும். இரண்டு கரங்களையும் உயர்த்தி நான் இந்த கொள்கையை ஆதரிக்கிறேன். ஏனென்றால் எனக்கு திருட்டு பிடிக்காது; திருடவும் தெரியாது. ஆனால், அது மட்டும் போதாது. இந்த நாட்டில் இனவாதத்தை முழுமையாக துடைத்து எறிய வேண்டும். ஊழலை ஒழிப்பதை விட இது கஷ்டமானது. அது எனக்கு தெரியும். “இலங்கை ஒரு சிங்கள, தமிழ், முஸ்லிம் நாடு”, “பௌத்த, இந்து, இஸ்லாமிய, கத்தோலிக்க நாடு” என்ற அடையாளங்களை நோக்கி பயணிப்போம். அனைவருக்கும் வாழ்த்துகள்.

## மலர்ந்துள்ள புத்தாண்டில்...

# இ.தொ.காவின் உத்தியோகத்தர்கள் ஒன்றிணைந்து தன்னம்பிக்கையோடு செயற்பட முன்வாருங்கள்

## புத்தாண்டு ஒன்றுகூடலில் சட்டத்தரணி கா. மாரிமுத்து

**(கொழும்பு கோட்டை தினகரன் நிருபர்)**

ஒவ்வொரு மனிதனும் தனது இலட்சியத்தை எட்டுவதற்கும் அடைவதற்கும் தன்னம்பிக்கை முக்கிய காரணமாகும். இதற்கு மனப்பாங்கில் மாற்றம் ஏற்பட வேண்டும். அனைத்து இ.தொ.காவின் உத்தியோகத்தர்கள் தன்னம்பிக்கையோடும் அர்ப்பணிப்போடும் சேவையாற்ற வேண்டுமென இ.தொ.காவின் பிரதம சட்ட ஆலோசகரும் சட்டத்தரணியுமான கா. மாரிமுத்து தெரிவித்துள்ளார்.

கொழும்பு சௌமியபவனில் நேற்று (01) நடைபெற்ற புத்தாண்டு ஒன்றுகூடலில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து அவர்,

ஒரு மனிதனுடைய இலட்சியங்கள் உயர்ந்தவையாக இருக்க வேண்டும். சுய நலத்துக்கப்பால் தமது சமூகத்துக்கும், உலகத்துக்கும் பயனுள்ளவையாக பெருமை தரக்கூடியதாக அமைய வேண்டும். அமரர்களான சௌமிய மூர்த்தி தொண்டமான், ஆறுமுகன் தொண்டமான் ஆகியோருடைய இலட்சியம் மலையகம் தலைநிமிர்ந்து வாழ வேண்டும் என்பதே.

அதற்காகவே, அவர்கள் தன்னம்பிக்கையோடு போராட்டத்தை தொடர்ந்தார்கள். சோதனைகளிலும் வேதனைகளிலும் அவர்கள் நம்பிக்கையில் தளர்ச்சி அடையவில்லை.



இவற்றால் அவர்களின் தன்னம்பிக்கை மென்மேலும் வலிமைபெற்றது. இதேபோல் உலகத்தில் சாதனைபடைத்தவர்கள் தன்னம்பிக்கை மூலமாகவே இச்சாதனைகளை படைத்திருக்கிறார்கள். ஆகவே, நமது உத்தியோகத்தர்கள் சமூகத்துக்கும் நாட்டுக்கும் மனித குலத்துக்கும் பெரும் செயல்களை ஆற்றக்கூடிய இலட்சியங்களை மனதில் கொண்டு தன்னம்பிக்கையோடு செயற்பட்டால் வெற்றி நிச்சயம்.


இதன் அடிப்படையில் வாழ்க்கையில் உயர்வதற்கு மனப்பாங்கில் மாற்றம் தேவை. எதனையும் சாதிப்பதற்கு இயலும் என்ற தன்மை மனதில் வரவேண்டும். இயலாமை என்பது ஒன்றில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

## சுற்றிவளைப்பு மேற்கொண்ட புலனாய்வு

# அதிகாரிகள் மீது துப்பாக்கிச்சூடு ஒருவர் பலி; ஒருவர் காயம்

## வெலிகம பகுதியில் சம்பவம்

**(வெலிகம தினகரன் நிருபர்)**



வெலிகம – பலான பகுதியில் (31/12) காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் உயிரிழந்ததுடன் மற்றுமொருவர் காயப்பட்ட நிலையில் காலி கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவில் கடமையாற்றும் 47 வயதுடைய பொலிஸ் உத்தியோகத்தரே இவ்வாறு உயிரிழந்தவரென பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. சுற்றிவளைப்புக்காக கொழும்பு புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் சிலர் வெலிகம பகுதிக்குச் சென்ற சந்தர்ப்பத்தில் இந்த துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சந்தேக நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டு, வான் ஒன்றில் தப்பிச் செல்ல முற்பட்டபோதே பொலிஸார் பதில் துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்தியுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் தென் மாகாண பிரதி பொலிஸ் மா அதிபரின் ஆலோசனைக்கமைய விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவிக்கின்றது.

# றுகுனுகுமாரி கடுகதி புகையிரதம் பெலியத்தையிலிருந்து ஆரம்பம்

**(வெலிகம தினகரன் நிருபர்)**

50 வருட காலமாக மாத்தறையிலிருந்து கொழும்பு மருதானை நோக்கிப் பயணித்த றுகுனுகுமாரி கடுகதி ரயில் ஜனவரி 1ம் திகதி முதல் தமது பயணத்தை பெலியத்தை புகையிரத நிலையத்திலிருந்து ஆரம்பிக்கவுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, காலை 5.25 மணிக்கு றுகுனுகுமாரி புகையிரதம் பெலியத்தை ரயில் நிலையத்திலிருந்தும் காலுகுமாரி கடுகதி ரயில் காலை 6.12 மணிக்கு மாத்தறை ரயில் நிலையத்திலிருந்தும் பயணத்தை ஆரம்பிக்கும். இதன் பிரகாரம் றுகுனுகுமாரி காலியிலிருந்து 7.00 மணிக்கும், காலுகுமாரி 7.25 மணிக்கும் மருதானை நோக்கிப் பயணிக்கவுள்ளது.

மேலும் வார நாட்களில் காலை 4.15 மணிக்கு பெலியத்தை ரயில் நிலையத்திலிருந்து மருதானை நோக்கி பயணிக்கும் சாகரிகா ரயில் 4.51 மணிக்கு மாத்தறையிலிருந்து பயணிக்கும்.

இதுகாலவரை சனி, ஞாயிறு தினங்களில் இவ் ரயில் வண்டி, பயணத்தை இடைநிறுத்தியிருந்தது. எனினும் மீண்டும் சனிக்கிழமை மாத்திரம் சாகரிகா ரயில் மருதானை நோக்கிப் பயணத்தை ஆரம்பிக்கவுள்ளது.



தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 ஜனவரி 2 செவ்வாய்க்கிழமை
தினகரன்
THINAKARAN

தொழுகை நேரம்
சுபஹ் - 05.00
லுஹர் - 12.15
அஸர் - 03.36
மஃரிப் - 06.06
இஷா - 07.21

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் மார்கழி 18
ராகுகாலம் : பகல் : 03.00 - 04.30வரை
சுபநேரம் : காலை : 07.30 - 08.30வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# புத்தாண்டில் கடமைகளை ஆரம்பித்த ஜனாதிபதி, ஊழியர்களுடன் உறுதிமொழி



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2024ஆம் ஆண்டு புத்தாண்டில் தனது கடமைகளை ஆரம்பித்த பின்னர், நேற்று (01) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் அமைச்சர்கள் மற்றும் அவரது ஊழியர்களைச் சந்தித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புதிய வருட கடமைகளை ஆரம்பிக்கும் முகமாக, தேசிய கொடியை ஏற்றி வைத்த பின்னர், நாட்டிற்காக உயிர்த் தியாகம் செய்த வீரர்களுக்கு 01 நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தினார்.

பின்னர் ஜனாதிபதி அலுவலக ஊழியர்கள் அனைவரும் ஒன்றிணைந்து அரச சேவை உறுதிமொழியை எடுத்துக் கொண்டனர்.

தனது ஊழியர்களுக்கு புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்த ஜனாதிபதி அவர்களுடன் சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டார்.

சவால்களை சரியாகப் புரிந்து கொண்டு 2024 இல், நாட்டை வெற்றிப் பாதைக்கு கொண்டு செல்வதற்கு நம்பிக்கையான மனப்பான்மையுடனும் உறுதியுடனும் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இதன் பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சர்கள் மற்றும் ஊழியர்களுடன் தேநீர் விருந்து பசாரத்தில் கலந்து கொண்டார்.

அமைச்சர் பந்துல குணவர்தன, இராஜாங்க அமைச்சர்களான ரஞ்சித் சியம்பலாபிட்டிய, ஷெஹான் சேமசிங்க, கனக ஹேரத், பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக் குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன, பொருளாதார விவகாரங்கள் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க, ஜனாதிபதியின் பாராளுமன்ற விவகார ஆலோசகர் ஆஷு மாரசிங்க, ஜனாதிபதியின் தொழிற்சங்கப் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய மற்றும் ஜனாதிபதி அலுவலகத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# கியூபாவின் தென்னை செய்கைக்கு இலங்கை அரசாங்கம் உதவியளிக்கும்



கியூபாவின் தென்னைச் செய்கைக்கு இலங்கை உதவவுள்ளது. பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும் கியூபா தூதுவருக்கும் இடையிலான சந்திப்பொன்று அலரி மாளிகையில் அண்மையில் இடம்பெற்றது.

இச்சந்திப்பிலேயே,கியூபத் தூதுவருக்கு இது பற்றிய உறுதிமொழியை பிரதமர் வழங்கினார்.

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஏனைய சர்வதேச மன்றங்களில் இலங்கைக்கு வழங்கப்பட்ட தொடர்ச்சியான ஆதரவுக்காக கியூபாவிற்கு பிரதமர் நன்றி தெரிவித்தார். டெங்கு நோயை எதிர்த்துப் போராடுவதற்கு இலங்கைக்கு வழங்கப்பட்ட உதவிகள் குறித்தும் அவர் குறிப்பிட்டார். மருத்துவத் துறையில் தொடர்ச்சியான ஒத்துழைப்பின் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார். நுளம்பு ஒழிப்பில் கியூபாவின் நிபுணத்துவத்தை இலங்கை சுகாதார அதிகாரிகளுடன் பகிர்ந்து கொள்ள தூதுவர் இணக்கம் தெரிவித்ததும் குறிப்பிடத்தக்கது. இரு நாடுகளுக்கும் இடையே விவசாயத் துறையில் புதிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப புத்தாக்கங்களை பரிமாறிக்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் பிரதமர் வலியுறுத்தினார். இலங்கை தென்னை ஆராய்ச்சி நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட வெற்றிகரமான பரிசோதனைகள் தொடர்பில் தாம் மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்த கியூப தூதுவர், தென்னை மரக்கன்றுகளை தமது நாட்டில் பயிர்ச்செய்கைக்காக பெற்றுக்கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

04



போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் புதிய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள பொறியியலாளர் ரஞ்சித் ரூபசிங்க, அமைச்சின் செயலகத்தில் உத்தியோகபூர்வமாக கடமைகளை பொறுப்பேற்றார். போக்குவரத்து பெருந்தெருக்கள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் இலங்கை போக்குவரத்து சபை, புகையிரத திணைக்களம் உள்ளிட்ட நிறுவனங்களின் தலைவர்களும் அமைச்சின் மேலதிக செயலாளர்களும் கலந்து கொண்டனர்.

## பாடசாலை போக்குவரத்து கட்டணம் அதிகரிப்பு

பாடசாலை போக்குவரத்து கட்டணத்தை அதிகரிக்க அகில இலங்கை பாடசாலை சிறுவர் போக்குவரத்து சங்கம் தீர்மானித்துள்ளது.பெப்ரவரியிலிருந்து இக்கட்டணங்கள் அதிகரிக்கப்படவுள்ளன.

பாடசாலை ஆரம்பிக்கும் போதே இது குறித்து பெற்றோருக்கு அறிவிக்கப்படும் என அச்சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று (01) முதல் புதிய வற் வரி திருத்தம் நடைமுறைப்படுத்தப்படுவதால், எரிபொருள் மற்றும் வாகன உதிரிபாகங்களின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதன் காரணமாக பாடசாலை போக்குவரத்துக் கட்டணங்கள் நிச்சயமாக அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, பேருந்து மற்றும் முச்சக்கரவண்டி கட்டணங்களும் அதிகரிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அடைய முடியாதுபோன இலக்குகளை வென்றெடுக்க இவ்வாண்டில் அர்ப்பணிப்போம்

அடைய முடியாத இலக்குகளை எட்டுவதற்கு அதிகமாகப் பணியாற்றும் ஆண்டாக புது வருடத்தை மாற்ற வேண்டும் என, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

புத்தாண்டுப் பணிகள் 2024 போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சில் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டன. அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களின் தலைவர்களுடனான விசேட கலந்துரையாடலில் அமைச்சர் கலந்து கொண்டார்.

இங்கு கருத்து தெரிவித்த அமைச்சர்,


"கடந்த ஆண்டில் திட்டமிடப்பட்ட சில திட்டங்களை அடைய முடியாது போனது. இந்த இலக்குகளை நிறைவேற்ற, அமைச்சக அதிகாரிகள் மற்றும் அதன் கீழ் செயல்படும் அனைத்து நிறுவனங்களும் விசேட கவனம் செலுத்த வேண்டும். அதற்காக புதிய ஆற்றலை வழங்கக்கூடிய பொறியியல் வேலைகள் மற்றும் நிர்வாகப் பணிகளில் தனியார் துறையைப் போலவே அனுபவமும் நல்ல திறமையும் கொண்ட அதிகாரியாக பொறியியலாளர் ரஞ்சித் ரூபசிங்க அமைச்சின் புதிய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.



இதன்படி, புத்தாண்டில் சிறப்பாக செயல்படுவதற்கு விரைவான முடிவுகளை எடுப்பது மிகவும் அவசியம். இல்லையேல் இந்த அமைச்சினால் ஏனைய அமைச்சுக்களை மிஞ்சும் வகையில் புதிதாக ஒன்றைச் செய்ய முடியாது. எமது சேவையின் முடிவில் நாட்டிற்கு நாம் எதை விட்டுச் சென்றுள்ளோம் என்பதைப் பற்றி சிந்திக்க இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பல அமைச்சுக்களில் பணியாற்றிய போது பல புதிய கருத்துக்களை நடைமுறைப்படுத்த முடிந்தது. இதன்படி, அனுராதபுரம் மிஹிந்தலை புகையிரத நிலையத்தை மையமாகக் கொண்டு பொருட்கள் பரிமாற்ற நிலையம் ஒன்றை நிறுவுவது உட்பட பல திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன.

கடந்த வருடம் மிகவும் சவாலானதாக அமைந்தது. நாம் திட்டமிட்ட அனைத்து இலக்குகளையும் அடைய முடியாவிட்டாலும், இந்த வருடத்தை நாட்டிற்கு அதிக வேலைகளை செய்யும் ஆண்டாக மாற்ற அனைவரும் உறுதி கொள்ள வேண்டும் என்றார்.

## பாண், பேக்கரி உற்பத்திகளின் விலைகள் அதிகரிக்கப்படாது



வற்வரி அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும் பாண் உள்ளிட்ட பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலை அதிகரிக்கப்படமாட்டாதென,

அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

வற்வரி அதிகரிப்பால் பேக்கரி தொழிற்துறை யினரும், பேக்கரி உரிமையாளர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும்

அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால்,பாண் உள்ளிட்ட பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலையை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும்,பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் வாழும் மக்களின் நிலைமைகளை கருத்திற்கொண்டு, பாண் உள்ளிட்ட பேக்கரி பொருட்களின் விலையை அதிகரிப்பதில்லை எனத் தீர்மானித்துள்ளோம். வற்வரி அதிகரிப்பால் ஏற்படும் பாரிய நட்டத்தை பேக்கரி உரிமையாளர்களே தாங்கவுள்ளதா கவும் அவர் குறிப்பிட்டார்.




# வடக்கில் ஆறு மாதங்களுக்குள் போதைப்பொருள் ஒழிக்கப்படும்

### குற்றச் செயல்களை கட்டுப்படுத்த அதிரடி ஏற்பாடுகள்

வடக்கில் எதிர்வரும் ஆறு மாதங்களுக்குள் போதைப்பொருள் ஒழிக்கப்படுமென, வடமாகாண பிரதி காவல்துறை மா அதிபர் மகிந்த குணரத்ன தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் தற்போது மேற்கொள்ளப்படும் போதைப்பொருள் மற்றும் குற்றச் செயல்களுக்கு எதிரான விசேட நடவடிக்கைகள், வட மாகாணத்திலும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

போதைப்பொருள் விற்பனை, போதைப்பொருள் பாவனை ஆகியவற்றில் ஈடுபடுவோர் கைது செய்யப்படுகின்றனர். அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நடவடிக்கையால் வடக்கில் 90 சதவீதம் குற்றச் செயல்கள் சடுதியாகக் குறைந்துள்ளன. குற்றச் செயல்களில் ஈடுபடும் மற்றும் போதைப்பொருள் வியாபாரத்துடன் தொடர்புடையவர்களின் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவர்களில் பலர் இனங்காணப்பட்டுள்ளனர். இவர்கள் விரைவில் கைது செய்யப்படுவார்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.




போதைப்பொருள் விற்பனை செய்வோர் தொடர்பாக 0718598834 (யாழ்ப்பாணம்), 0718598835 (காங்கேசன்துறை), 0718598836 (வவுனியா), 0718598837 (மன்னார்), 0718598838 (கிளிநொச்சி), 0718598839 (முல்லைத்தீவு) என்ற இலக்கங்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

இந்த இலக்கங்களுக்கு அழைப்பெடுப்பவர்களின் விபரங்கள் இரகசியமாகப் பாதுகாக்கப்படவுள்ளன. இதனால்,தைரியமாக தகவல்களை தெரிவிக்க மக்கள் முன்வர வேணடும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

வடமாகாண பிரதி காவல்துறை மா அதிபர் காரியாலயத்திலும் இது குறித்த தகவல்களை நேரடியாக முறையிடலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எலிக் காய்ச்சலால் இளைஞர் மரணம்

வவுனியாவில் எலிக்காய்ச்சல் காரணமாக இளைஞர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

செட்டிகுளம் பகுதியைச் சேர்ந்த இவ்விளைஞருக்கு சில தினங்களாக காய்ச்சல் இருந்துள்ளது. இதனையடுத்து செட்டிகுளம் பிரதேச வைத்தியசாலையில் இவர் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக அங்கிருந்து வவுனியா பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார். இந்நிலையில் சிகிச்சை பலனின்றி இவ்விளைஞர் கடந்த ஞாயிற்றுக்கிழமை (31) மரணமடைந்தார்.

இதன்பின் சட்ட வைத்திய அதிகாரியினால் உடற்கூற்று பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. எலிக்காய்ச்சல் காரணமாக இவர் மரணமடைந்ததாக தெரிவிக்கப்பட்டது.



மாணிக்கவாசகர் அறப்பணி மன்றம் ஏற்பாட்டில் வத்தளை ஹேக்கித்த ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான "மாணிக்கவாசகர் வீதி உலா" புதன்கிழமை(27) வெகு சிறப்பாக இடம்பெற்றது. ஹேக்கித்த ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான குருக்கள் சிவஸ்ரீ ஜெகதானந்த சிவாச்சாரியார் பூஜை வழிபாடுகளை மேற்கொண்டார். மாணிக்கவாசகர் அறப்பணி மன்றத் தலைவர் சண்முகராஜா சிவராஜா, செயலாளர் சந்திரசேகரன் மணிமாறன், ஸ்தாபகர் த.சுதந்தன், பொருளாளர் எஸ். நீலாம்பால் ஆகியோரின் வழிகாட்டலில் மார்கழி மாத திருவாதிரை மகோற்சவம் இடம்பெற்றது. (படம்கொழும்பு கோட்டை தினகரன் நிருபர்)

# கொழும்புத் தமிழ் சங்கத்தின் அறிவோர் ஒன்றுகூடல்

மனித உரிமைகள் ஆணைக் குழு உறுப்பினர் பேராசிரியர் தை. தனராஜின் தலைமையில் நாளை 2024.01.03 ஆம் திகதி புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவிருக்கும் அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் செயற்கை நுண்ணறிவு ஒரு எளிய அறிமுகம் என்னும் தலைப்பில் மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தின் கணினி, விஞ்ஞானம் மற்றும் பொறியியல் துறைத் தலைவர் கலாநிதி இ.த.உதயசங்கர் உரை நிகழ்த்தவுள்ளார்.

## 2024: சரியான தீர்மானங்களுடன்...

பெயர் படிகத்தைத் திரைநீக்கம் செய்து, விமானப்படை தலைமையத்தை திறந்துவைத்த பின்னர் ஜனாதிபதி, விமானப்படையின் மரியாதை அணி வகுப்பை பார்வையிட்ட அதேநேரம், விமானப் படையினரின் விமானங்களும் ஜனாதிபதிக்கு மரியாதை செலுத்தும் நிமித்தமாக வானில் பறந்தன.

அத்துடன், ஜனாதிபதி, விமானப் படையினருடன் சிநேகபூர்வமாக கலந்துரையாடியதுடன் வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க,

''விமானப்படைக்கு இன்று சிறப்பான நாளாகும். 73 வருட வரலாற்றில் நாட்டில் உள்நாட்டுப் போர், கலவரங்கள், இயற்கை அனர்த்தங்கள் ஆகியவற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்க இப்படையினர் அளவற்ற அர்ப்பணிப்புக்களைச் செய்திருந்தனர். இன்று விமானப் படைக்கு புதிய தொழில்நுட்பத்துடன், புதிய தலைமையகம் கிடைத்துள்ளது. எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சவால்களை கையாள்வதற்குத் தேவையான தொழில்நுட்ப அறிவை இதனூடாக பெற்றுக் கொள்ள முடியும்.

எதிர்காலத்தில் இலங்கை இந்து சமுத்திரத்தின் பாதுகாப்பு கேந்திர நிலையமாக மாறும் போது விமானப்படை மீது பெரும் பொறுப்புக்கள் சேரும். அதேபோல் புதிய அறிவு மற்றும் தொழில்நுட்பத்துடன் எமது படையினர் முன்னோக்கிச் செல்ல வேண்டும். சர்வதேசத்தில் ஏற்படக்கூடிய மோதல்களை முன்கூட்டியே அறிந்துகொண்டு, அதற்கு தீர்வு தேடுவதற்கான பாதுகாப்பு அறிவும் அதனூடாக கிடைக்கும்.

இதற்கமைய இராணுவத் தலைமைக வளாகத்துக்குள் விமானப்படைத் தலைமையகமும் நிறுவப்பட்டுள்ளமை அதற்கான அடிப்படை முயற்சியாக அமைந்துள்ளது. இதற்கு முன்பிருந்த விமானப்படைத் தலைமையகத்தை பொலிஸ் தலைமையகத்திற்கு வழங்க எதிர்பார்த்துள்ளோம். பொலிஸ் தலைமையகம், வெளிவிவகார அமைச்சு அமைந்துள்ள கட்டிடம் ஆகியவற்றை விடுவித்து சுற்றுலா வலயமாக மாற்ற திட்டமிட்டுள்ளோம்.

இன்று நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய போராட்டத்தை எதிர்கொண்டுள்ளோம். நான், ஜனாதிபதியாக நாட்டைப் பொறுப்பேற்ற போது, நாட்டின் பொருளாதாரம் முழுமையாக சரிவடைந்திருந்தது. நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் பொறுப்பு என்னிட்டம் ஒப்படைக்கப்பட்டது. இங்கு அரசியல் செய்வதா? இல்லாவிட்டால் நாட்டின் பொருளாதாரத்திற்காக பணியாற்றுவதா? என நேரடியாக அமைச்சரவையுடன் ஆலோசிக்க நேர்ந்தது.

பொருளாதார வேலைத்திட்டத்தை இரு வருடங்கள் காலம் தாழ்த்தியதால் லெபனான் பெரும் பிரச்சினைகளை எதிர்கொண்டது.

அரசியல் ஸ்திரமற்ற நிலைமையினால் கிரேக்கம் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள 13 வருடங்கள் திண்டாடியது. அவர்கள், அரச ஊழியர்களின் சம்பளத்தை 50% சதவீதமாக குறைக்க நேர்ந்தது.

இருப்பினும் நாம் அந்த நிலைமைக்கு செல்லவில்லை. சரிவடைந்து கிடந்த எமது மொத்த தேசிய உற்பத்தி எமது நேரடி தீர்மானங்களின் பலனாக முன்னேற்றம் கண்டது. 2023 ஆண்டு இறுதியில் ஓரளவு வலுவான பொருளாதார நிலைமை உருவாகியுள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கான தீர்மானங்களை, சரியான நேரத்தில் மேற்கொள்ள வேண்டும். இவ்வருடத்தில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகம் 3% ஆக அமையும் என நம்புகிறேன். பின்னர் அதனை மிஞ்சிய வளர்ச்சி ஏற்படும். எமக்கு ஒத்துழைப்பு வழங்க பல்வேறு நாடுகள் முன்வந்துள்ளன. எதிர்காலத்தில் இந்தக் கடன்களை செலுத்தும் இயலுமை எம்மிடம் உள்ளதா என்பதே அவர்களின் கேள்வியாகவுள்ளது. அதனால் நாம் புதிய வருமான வழிமுறைகளைத் தேடிக்கொள்ள வேண்டும்.

நாம் கடந்த வருடத்தில் 3.1 ட்ரில்லியன்களை வருமானமாக ஈட்டினோம். அது எமது மொத்த தேசிய உற்பத்தியில் 12% ஆகும். 2026 ஆம் ஆண்டளவில் 15% ஆக மொத்த தேசிய உற்பத்தியைப் பலப்படுத்த வேண்டும். 2024 ஆம் ஆண்டில் 4.2 ட்ரில்லியன்களை வருமானமாக ஈட்ட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். அதற்காகவே வற் வரி மீண்டும் திருத்தம் செய்யப்பட்டது.

அதேபோல் தசம் 8 (0.8) அளவிளான தன்னிறைவை எதிர்பார்க்கிறோம். இருப்பினும் 2025 வரையில் அதனை 2.3 ஆக தக்கவைக்க வேண்டியதும் அவசியம். அந்த இலக்குகளுடனேயே முன்னோக்கிச் செல்ல வேண்டும். இது கடினமான இலக்கு.

கஷ்டங்கள் உள்ளன. அது தொடர்பில் பல முறை சிந்தித்துள்ளேன். இந்தத் தீர்மானங்களை மேற்கொள்ள தவறினால் முன்னைய பொருளாதார நிலைமையை நாம் மீண்டும் சந்திக்க நேரிடும் என்றார்.

## ஜப்பானை உலுக்கிய பாரிய...

ஜப்பானின் மேற்கு பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டதை அடுத்து சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. தற்போது சுனாமி அலைகள் நகரத்தை தாக்க தொடங்கியுள்ளது. மேலும், நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் குறித்த தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை.

மேற்கு கடலோர பகுதியில் உள்ள மக்களை உடனடியாக வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நிகதா, டோயமா, வஜிமா, இஷிகவா ஆகிய பகுதிகளில் கடல் அலைகள் சீற்றத்துடன் எழும்ப தொடங்கியுள்ளன . இஷிகாவா பகுதியில் சுமார் 5 அடி அளவு ஆக்ரோஷமான கடல் அலைகள் எழும்பியுள்ளதுடன், கடல் சீற்றத்துடன் காணப்படுகிறது. சுற்று வட்டப்பகுதிகளில் இருக்கும் மக்கள் உடனடியாக வெளியேற எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இஸ்கிகவா பகுதியில் உள்ள மக்களைபாதுகாப்பான பகுதிகளுக்கு செல்லுமாறு அதிகாரிகள் கேட்டுள்ளனர்.

ஐந்து மீற்றர் நீளமான சுனாமி அலைகள் குறித்து எச்சரிக்கை வெளியாகியுள்ளது. பூகம்பத்தை தொடர்ந்து இஸ்கிகவா பகுதியில் பல வீடுகள் தரைமட்டமாகியுள்ளன மின்கம்பங்கள் சரிந்து விழுந்துள்ளன. டோக்கியோவிற்கும் பூகம்பத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிக்கும் இடையில் புகையிரத போக்குவரத்து இடைநிறுத்தப்பட்டுள்ளது.

## சமூக பொலிஸ் குழுக்களை...

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள கனடாவின் பீல் பிராந்தியபொலிஸ் பிரதானி அண்மையில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸை சந்தித்து விசேட கலந்துரையாடலில் ஈடுப்பட்டார்.

இதன்போது, இரு நாடுகளின் பாதுகாப்பு தொடர்பான பல விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட சமூக பொலிஸ் பிரிவுகளை வலுப்படுத்தும் வேலைத்திட்டம் தொடர்பில் கனேடிய பொலிஸ் பிரதானி பாராட்டுத் தெரிவித்தார். இத்திட்டத்தை மேலும் வலுப்படுத்த ஆதரவை வழங்குவதாகவும் அவர் உறுதியளித்தார். அத்துடன் இரு நாடுகளின் பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பிலும் பல முக்கிய விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

1973 ஆம் ஆண்டு இலங்கையில் பிறந்த நிஷான், 1975 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்ட யாழ்ப்பாணத்தின் முன்னாள் மேயர் அல்பிரட் துரையப்பாவின் உறவினராவார். இவர் கனடாவின் டொரண்டோ பல்கலைக்கழகத்தில் பட்டதாரி. தற்போது கனேடியபீல் பிராந்திய பொலிஸ் பிரதானியாக கடமையாற்றும் நிஷான் இலங்கைக்கு பெருமை சேர்ப்பதாக அமைச்சர் இதன்போது தெரிவித்தார். பொலிஸ் தலைமையகத்திற்கு வருகை தந்த நிஷான் துரையப்பாவுக்கு விசேட பொலிஸ் மரியாதை செலுத்தப்பட்டது. இவ்விஜயத்தை நினைவு கூரும் வகையில் விசேட நினைவு சின்னங்களும் வழங்கப்பட்டன .

## மாவட்ட கிளை உறுப்பினர்களை...

தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டப் பணிமனையில் நேற்று முன்தினம் (31) இடம்பெற்றுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவிக்கு சிறிதரன் எம்பி போட்டியிடவுள்ள நிலையில்,இச்சந்திப்பு பரபரப்பாக பேசப்படுகிறது. இதில் உரையாற்றிய சிறிதரன் தெரிவித்ததாவது : இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவராக தாம்,தெரிவானால் தமிழ் மக்களிடையே கட்சியின் செல்வாக்கை வளர்க்கவும், தமிழர் உரிமைகளை மீட்டெடுக்கவும், தமிழ் தேசியத்தை முன்னெடுத்துச் செல்லவும், கூட்டு செயற்பாட்டை மேம்படுத்தவும், புலம்பெயர் தமிழரோடு சிறந்த உறவைப் பேணவும் அயராது உழைப்பதாக உறுதியளித்தார்.

மாவட்டங்கள் சார்ந்த முடிவுகளை எடுக்கும் போது மாவட்டக் கிளைகளோடு கலந்தாலோசித்து முடிவெடுப்பதாகவும் அவர், மாவட்ட கிளை உறுப்பினர்களிடம் கூறினார்.இறுதியில் உறுப்பினர்களது கேள்விகளுக்கும் அவர் பதிலளித்தார்.

இந்நிலையில், தத்தம் மனசாட்சிப்படி தலைவர் தேர்தலில் உறுப்பினர்கள் வாக்களிக்கலாம் என்று திருகோணமலை மாவட்டக் கிளை அறிவித்துள்ளது.

## அலட்சியம் காட்டப்படுவதாக...

ஏமாற்றமளிக்கிறது. இதனால், இவர்கள் இதுகுறித்து சுகாதார அமைச்சருக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

நோயாளர்களுக்குத் தேவையான உதவிகளை உச்சளவில் செய்த வருகின்ற நிலையில்,

இவ்வாறு சிலர் நடந்து கொள்வது கவலையளிப்பதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். இந்நிலைமைகளை நிவர்த்திக்க அதிகாரிகள் அதிகளவு அர்ப்பணிக்க வேண்டும் எனவும் அமைச்சர் கதெரிவித்தார்.

பேராதனை போதனா வைத்தியசாலையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்ட அமைச்சர் ரமேஷ் பத்திரன, இது தொடர்பான முறைப்பாடுகளை பகுப்பாய்வு செய்வதில் பல குறைபாடுகள் காணப்படுவதாகவும் சுட்டிக் காட்டினார்.

## லிட்ரோ சமையல் எரிவாயுவின்...

தெரிவித்துள்ளது. இதன் பிரகாரம், 12.5 கிலோகிராம் சமையல் எரிவாயுவின் புதிய விலை 4,250 ரூபாவாகியுள்ளது. அத்துடன், 05 கிலோகிராம் சமையல் எரிவாயுவின் விலை 276 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் புதிய விலை 1,707 ரூபாவாகியுள்ளது. மேலும், 2.3 கிலோகிராம் சமையல் எரிவாயுவின் விலை 127 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு,புதிய விலை 795 ரூபாவாக பதிவாகியுள்ளது.

## பணவீக்கத்தை தனி பெறுமதியில்...

2024 இல் 5% அளவில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நாட்டில் வணிக நம்பிக்கையை வளர்ப்பதற்கு இது ஒரு முக்கிய காரணமாகும்.

மேலும், 2023 ஆம் ஆண்டில் அரச வருமானம் 3110 பில்லியன் ரூபாவாகும். அதன்படி, 2023 ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு 2850 பில்லியன் ரூபாவாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் இது அரசின் வருமானத்தில் 11.2% ஆகும். 2026 இல் 15% வளர்ச்சியை எட்ட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

இந்நாட்டு வரி கோப்பு எண்ணிக்கையின் வளர்ச்சி 2019 இல் பதிவு செய்யப்பட்ட மொத்த வரி செலுத்துவோர் எண்ணிக்கை 1,705,233 ஆகும். பல்வேறு கொள்கை ரீதியிலான முடிவுகளால், 2020 இல் 677,613 ஆகக் குறைந்துள்ளது. 2021 இல், அது 507,085 ஆக இருந்தது. 2022 இல் 437,547 ஆக இருந்த வரிக் கோப்புகளின் எண்ணிக்கையை ஒரு மில்லியனாக அதிகரிக்க முடிந்துள்ளது.

## குழந்தைகளுக்கு தடுப்பூசி...

ஒன்பது மணி முதல் மாலை நான்கு மணி வரை தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. அம்மை நோயால் அதிகம் பாதிக்கப்பட்ட குழந்தைகளுள்ள ஒன்பது மாவட்டங்களில் இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும்.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, கண்டி, யாழ்ப்பாணம், குருநாகல் மாவட்டங்களிலும் மற்றும் கல்முனை பிரதேசத்திலும் இத்திட்டம் முதற்கட்டமாக ஆரம்பிக்கப்படும்.

## இன்றைய பலன்கள்

### ( 02. 01. 2024 )

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா

(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:**
ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்தும் சூழ்நிலை ஏற்படும். சகோதரர்களால் சில இடையூறுகள் ஏற்பட்டு அகலும்.

**ரிஷபம்:**
வெளிநாட்டு யோகமும் அங்குள்ள நல்ல நிறுவனங்களில் பணிபுரியும் வாய்ப்பு வந்து சேரும். பிள்ளைகளை கல்யாணம் கனவுகளை நனவாக்குவீர்கள் .

**மிதுனம்:**
இளைய சகோதரரோடு இணக்கம் ஏற்படும். வெளிநாட்டில் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைக்கும்.

**கடகம்:**
தொழிலில் புதிய வாய்ப்புகள் வந்து சேரும். பிரச்சனையை உருவாக்கிக் கொண்டிருந்த பழைய பங்குதாரர்களை விலக்கி விட்டு புதிய பங்குதாரர்களை சேர்த்துக் கொள்ள முன் வருவீர்கள்.

**சிம்மம்:**
தாயின் உடல்நலம் சீராக ஒரு தொகையை செலவிடும் சூழ்நிலை உருவாகும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் ஆதரவோடு கேட்ட இடத்திற்கு மாறுதல் கிடைக்கும்.

**கன்னி:**
தொழில் ரீதியாக வாங்கிய கடன்களை வசூல் செய்ய விடிவு காலம் பிறக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு வெளிநாடு செல்ல வாய்ப்பு வரவில்லையே என்ற ஏக்கம் இப்பொழுது மாறும்.

**துலாம்:**
பெண் பிள்ளைகளின் சுபச் சடங்குகள், படித்து முடித்தவர்கள் பட்ட மேற்படிப்பிற்காக வெளிநாடு செல்லும் வாய்ப்பு இக்காலத்தில் கைகூடும்.

**விருச்சிகம்:**
லாபத்தை வரவழைக்கும் விதத்தில் கையாள நண்பர்களும் மாற்று இனத்தாரும் உறுதுணையாக இருப்பார்கள்.

**தனுசு:**
வீடு மாற்றமும் இடமாற்றமும் எதிர்பாராமல் வந்து சேரும். ஒரு சிலருக்கு நாடு மாற்றம் வந்து நன்மை தரும்.

**மகரம்:**
தொழிலில் திருப்திகரமான லாபம் வந்து சேரும். ஒரு சிலருக்கு கிளை தொழில் தொடங்கும் யோகம் உண்டு.

**கும்பம்:**
ஏற்றுமதி வணிகம் மற்றும் பங்குச் சந்தையில் ஈடுபட்டவர்கள் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

**மீனம்:**
பெற்றோர் வழியில் பிணக்குகள் ஏற்பட்டு பிறகு இணக்கம் வரும். இழந்த சொத்துக்களை மீண்டும் பெற வாய்ப்பு உண்டு.

## கியூபாவின் தென்னை... (03ஆம் பக்க தொடர்ச்சி)

விரைவில் கியூபாவிற்கு 200 தென்னங்கன்றுகள் நன்கொடையாக வழங்கப்படும் என்று தூதுவரிடம் பிரதமர் உறுதியளித்தார். இலங்கையின் தென்னை ஆராய்ச்சி நிறுவனம் கியூபாவின் தென்னை பயிர்ச்செய்கையை அபிவிருத்தி செய்வதற்கு நிபுணத்துவத்தையும் வழங்கும். இலங்கையில் உணவு உற்பத்தி, விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக தூதுவர் மேலும் தெரிவித்தார்.

## சீரற்ற காலநிலை...

இதன்படி, கிழக்கு மாகாணத்தில் மூவாயிரத்து 811 குடும்பங்களை சேர்ந்த 12,518 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிக்கைகள் சுட்டிக் காட்டுகின்றன.இடி மற்றும் மின்னல்களிலிருந்து பாதுகாப்பு பெற அவதானமாகச் செயற்படுமாறும் மக்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

## 97 பொருட்கள், சேவைகளுக்கு...

சேவைகளின் விலை மற்றும் கட்டணங்களின் விலைகள் அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

உணவுப் பொருட்களுக்கான விலை, போக்குவரத்து, தொலைபேசி சேவை உட்பட பல சேவைகளின் கட்டணங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, நேற்று (01) முதல் அமுலுக்கு வரும் வகையில் முச்சக்கரவண்டி கட்டணத்தை அதிகரிக்க முச்சக்கரவண்டி சாரதிகள் மற்றும் உரிமையாளர்களின் சங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய, இரண்டாவது கிலோமீற்றருக்கு அறவிடப்படும் 80 ரூபா கட்டணம் 100 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளதாக கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அச்சங்கத்தின் பொதுச் செயலாளர் லலித் ரோஹன தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதியின் யாழ். விஜயத்தில்...

பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இருந்த போதிலும் அவை கைகூடவில்லை. இந்நிலையில் தற்போது இத்திட்டத்திற்கு 250 மில்லியன் ரூபாவை ஒதுக்குவதற்கான அங்கீகாரம் கிடைத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## 2024: வாக்காளர் பதிவு...

வேலைத்திட்டத்தை துரிதப்படுத்த தீர்மானிக்கப்பட்டது.

இதையடுத்தே,புதிய வாக்காளர்களைப் பதியும் பணிகளை ஆரம்பித்ததாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டார்.

## வற்வரி; போலி பிரசாரங்களை...

தாண்டி, நாட்டை முன்னேற்றும் வகையில் அரசாங்கத்துடன் இணைந்து பயணிப்பதே சிறந்த பயணமாகும். தவறு செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுப்போம். வற் என்ற போர்வையில் சில நேரங்களில் இல்லாத அரக்கனை உருவாக்கி மக்களை தூண்டிவிட்டு குழப்பம் விளைவிப்பவர்களுக்கு எதிராக கடுமையான முடிவெடுக்கப்படும். இவர்களுக்கு எதிராக சட்டத்திற்கு உட்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்” எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## எரிபொருள் விலைகள்...

ஒரு லீற்றர் இலங்கை வெள்ளை டீசலின் விலை 29 ரூபாவினால் உயர்த்தப்பட்டு புதிய விலை 358 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது.

ஒரு லீற்றர் இலங்கை சுப்பர் டீசலின் விலை 41 ரூபாவினால் உயர்த்தப்பட்டு புதிய விலை 475 ரூபாவாகியுள்ளது.

இதேவேளை, ஒரு லீற்றர் மண்ணெண்ணெயின் விலை 11 ரூபாவினால் குறைக்கப்பட்டு, புதிய விலை 236 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

இந்த விலை மாற்றங்கள் நேற்று அதிகாலை 5.00 மணி முதல் நடைமுறைக்கு வரும் என பெட்ரோலிய வளக்கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. இந்த விலை மாற்றத்திற்கு நிகராக ஏனைய நிறுவனங்களும் விலை மாற்றத்தை மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள ஆணையாளரின் பணிகளுக்கு பலரும் பாராட்டு

## அரச சேவையிலிருந்து ஓய்வு

கடந்த 13 வருடங்களாக சுதேச மருத்துவத் திணைக்கள கிழக்கு மாகாண ஆணையாளராக பணியாற்றிய வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதர் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். மாகாணத்திலுள்ள 12 வைத்தியசாலைகளை தரமுயர்த்தவும், புதிய வைத்தியசாலைகளை உருவாக்கவும், அவற்றுக்குத் தேவையான தளபாடங்களை வழங்கி வைக்கவும், 32 வைத்தியசாலைக்கு நிரந்தரக் கட்டடத்தை அமைத்துக் கொடுக்கவும் அவர் உரிய நடவடிக்கை மேற்கொண்டிருந்தார். அவர் ஆற்றிய சேவையை பலரும் பாராட்டுகின்றனர்.

113 ஆக இருந்த வைத்திய ஆளணிகளை 234 ஆக அதிகரிக்கச் செய்யவும், ஊழியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்பவும் அவர் நடவடிக்கை மேற்க கொண்டிருந்தார்.





பரம்பரை வைத்தியர்களின் திறமைகளை வெளிக்கொணர வைத்து, அவர்களுக்கான பதிவுகளை பெற்றுக் கொடுத்ததுடன், அவர்களுக்குத் தேவையான மருத்துவ உபகரணங்களை வழங்கி வைக்கவும் முன்னின்று செயற்பட்டார்.

வைத்தியர்கள் மற்றும் ஊழியர்களுக்கு துறை சார்ந்த பயிற்சிகளை வழங்கவும், வைத்தியர்கள் தங்களின் பட்டப்படிப்புக்களை வெளிநாடுகளில் மேற்கொள்வதற்கான சகல ஒத்துழைப்புக்களையும், உதவிகளையும் அவர் வழங்கினார்.

அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை போன்ற மாவட்டங்களில் உள்ள ஆயுள்வேத வைத்தியசாலைகளில் கடமையாற்றி வந்த ஊழியர்களுள் திறமையானவர்களின் கல்வித்தரத்தை அடையாளப்படுத்தி அவர்களை பதவியுயர்த்தும் நோக்கில் மர்த்தனர், மருந்துக் கலவையாளர், பரிசாரகர் போன்ற பதவிகளுக்கான பயிற்சிகளையும், அப்பதவியுயர்வு நியமனங்களையும் வழங்கி வைப்பதற்கும் முன்னின்று செயற்பட்டார்.

கிழக்கு மாகாணத்தில் முதன்முறையாக 'சர்வதேச ஆயுள்வேத மாநாடும், கண்காட்சியும்' மிகப் பிரமாண்டமான முறையில் பல்கலைக்கழகங்களின் பங்களிப்போடு நடத்தப்பட்டதற்கு இவரே காரணமாவார்.

'கிழக்கின் அவிழ்தம்' என்ற வருடாந்த சஞ்சிகையை வெளியீடு செய்வதற்கும், அச்சஞ்சிகை தொடராக வெளிவருவதற்கும், ஆயுள்வேத வைத்தியசாலைகளிலும், மூலிகைத் தோட்டங்களிலும் காணப்படும் பிரதான மூலிகைகளை அடையாளப்படுத்தி 'மூலிகை கையேடு' எனும் தலைப்பில் தமிழ் மற்றும் சிங்கள மொழியில் நூல் ஒன்றையும் வெளியீடு செய்யவும் செயற்பட்டார்.

குறிப்பாக, கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்திற்கு வருவாய் ஒன்றை பெற்றுக்கொடுக்கும் நோக்கில், மூலிகை சார் உணவுப் பொருட்களை தயாரிப்பதற்கு வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோரை ஊக்குவிப்புச் செய்து வல்லாரை கேக் , அமுக்கரா பிஸ்கட் மற்றும் சத்துமா பிஸ்கட் போன்ற உற்பத்திகளை சொற்ப காலத்திற்குள் தயாரிக்கச் செய்தார். அத்துடன் அவற்றுக்குத் தேவையான உபகரணங்களைப் பெற்றுக் கொடுக்கவும், இன்றைய காலத்திற்கு ஏற்றாற்போல் அவற்றை நவீன வடிவில் வடிவமைக்கச் செய்து இலங்கையின் நாலாபக்கத்திலும் அதை கேட்டுப் பெற்றுக் கொள்ளுமளவிற்கு அதில் வெற்றியும் கண்டார்.

இலங்கையின் பிரதமர் தொடக்கம், கிழக்கு மாகாண ஆளுநர், சுதேச மருத்துவத்துறை அமைச்சர் உள்ளிட்ட ஏனைய அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், கிழக்கு மாகாண பிரதம செயலாளர், அமைச்சுக்களின் செயலாளர்கள், மாவட்ட அரசாங்க அதிபர்கள், மாகாண திணைக்களத் தலைவர்கள், நிறுவனத் தலைவர்கள் உள்ளிட்ட பலரின் வரவேற்பையும், வாழ்த்துக்களையும் இவர் பெற்றுக் கொண்டார். அதுமாத்திரமன்றி வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என்ற பாகுபாடின்றியும், இன மத வேறுபாடின்றியும் எல்லோரையும் சமமாக மதித்து அரவணைத்து நடந்து சென்றதனால், கிழக்கு மாகாண சுதேச மருத்துவத்துறையை பல்வேறு பட்ட வளர்ச்சிகளையும், உயர்ச்சிகளையும் காணும் வகையில் இவரது சேவைக்காலம் அமைந்திருந்தது.

அவரது 28 வருட அரச சேவைக்காலப் பகுதியில் எல்லோரையும் சமமாக மதித்து அரவணைத்து செயற்பட்டார். கடமையில் எவ்விதமான பிரச்சினையுமின்றி வழிநடத்திச் செல்வதற்கு அவரின் பணிவான, கனிவான நடத்தையே காரணமாகும்.

எம்.எப்.எம்.நவாஸ்
(திராய்க்கேணி தினகரன் நிருபர்)

# புத்தாண்டு பிறந்தவுடனேயே இன்று தமிழகத்துக்கு வருகிறார் பிரதமர் மோடி

## தேர்தலுக்கு ஈடுகொடுக்குமா பா.ஜ.க? மூத்த தலைவர்களுடன் ஆலோசனை



தமிழ்நாட்டுக்கு இன்று வருகை தரும் பிரதமர் நரேந்திர மோடி திருச்சியில் 31 பேர் கொண்ட பா.ஜ.க குழுவினருடன் தமிழ்நாடு அரசியல் நிலைவரம் குறித்து தனியே ஆலோசனை நடத்துவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. பிரதமர் மோடி இன்று திருச்சியில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

திருச்சியில் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் 38 ஆவது பட்டமளிப்பு விழாவில், பல்கலைக்கழகத்தில் சிறந்த மாணவர்களுக்குப் பிரதமர் மோடி விருதுகள் வழங்குகிறார். இந் நிகழ்ச்சியில் அவர் உரையாற்றுகிறார். திருச்சிராப்பள்ளி சர்வதேச விமான நிலையத்தின் புதிய முனையக் கட்டடத்தைப் பிரதமர் மோடி திறந்து வைக்கிறார்.

மேலும் ரயில்வே திட்டங்கள், வீதி அபிவிருத்தித் திட்டங்கள், திருச்சி என்.ஐ.டி. மாணவர் விடுதி உள்ளிட்டவைகளுக்கும் பிரதமர் மோடி அடிக்கல் நாட்டியும் திறந்தும் வைக்கவும் உள்ளார். இந்த நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு லட்சத் தீவுகளுக்கு பிரதமர் மோடி செல்கிறார்.

லோக்சபா தேர்தல் அடுத்த சில மாதங்களில் நடைபெறும் நிலையில் புத்தாண்டின் தொடக்கத்திலேயே பிரதமர் மோடியின் தமிழ்நாடு வருகை தமிழ்நாடு பா.ஜ.கவினரை உற்சாகப்படுத்தியிருக்கிறது. அதுவும் தமிழ்நாட்டில் பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க, பா.ஜ.க கூட்டணியில் இருந்து வெளியேறி விட்ட நிலையில், பா.ஜ.க தனித்து விடப்பட்டிருக்கிறது.

தற்போதைய நிலையில் தமிழ்நாட்டில் பா.ஜ.கவுடன் 5 இற்கும் அதிகமான வாக்குகளைக் கொண்ட கட்சிகள் கூட்டணியில் இல்லை. மேலும் லோக்சபா தேர்தல் தொடர்பான தமிழ்நாட்டு கருத்துக் கணிப்புகள் பெரும்பாலும் பா.ஜ.கவுக்கு 0 முதல் 1 இடம் எனவே கணித்தும் வருகின்றன. வட இந்தியாவில் மிகப் பெரிய பிரம்மாண்ட வெற்றியைப் பெறும் என கணிக்கும் அத்தனை கணிப்புகளுமே தமிழ்நாட்டில் பா.ஜ.கவுக்கு இவ்வளவுதான் தேறும் என அடித்தே சொல்கின்றன.

இந்த நிலையில் தமிழ்நாட்டில் பா.ஜ.கவை எப்படி அடுத்த கட்டத்துக்கு நகர்த்திச் செல்வது? தமிழ்நாட்டின் யதார்த்தமான அரசியல் கள நிலவரம் என்ன? உண்மையிலேயே தமிழ்நாட்டில் லோக்சபா தேர்தலில் பா.ஜ.கவுக்கு 0 முதல் 1 இடம் என்கிற நிலைமைதானா? என்பவை தொடர்பாக பிரதமர் மோடி இன்று திருச்சியில் பா.ஜ.க நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்த உள்ளார். தமிழ்நாடு பா.ஜ.கவின் மூத்த தலைவர்களை உள்ளடக்கிய 31 பேர் கொண்ட குழு இந்த ஆலோசனையில் பங்கேற்க உள்ளதாக கூறப்படுகிறது.

# கூனம்பட்டி ஸ்ரீகல்யாணபுரி ஆதீனத்தின் குருமகாசந்நிதானம் இன்று இலங்கை வருகை

கூனம்பட்டி ஸ்ரீகல்யாணபுரி ஆதீனத்தின் 57ஆவது குருமகாசந்நிதானம் பெருமானார் ஜகத்குரு ஸ்ரீலஸ்ரீ இராஜ. சரவண மாணிக்கவாசக சிவாச்சாரிய சுவாமிகள் இன்று (02. 01. 2024) இலங்கைக்கு வருகை தருகின்றார். சுவாமிகள், கொழும்புத் தமிழ்ச் சங்க மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு உலக சைவப் பேரவையின் இலங்கைக் கிளை அனுசரணையுடன், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் ஏற்பாட்டில் இலங்கை சைவநெறிக் கழகத்தின் பங்களிப்புடன் நடைபெறும் சைவநன்னெறி அரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுவார்.

சைவ நன்னெறி' என்னும் தலைப்பில் அவர் அருளுரை நிகழ்த்துவார். மாணிக்கவாசகப் பெருமான் தம் சீடராக விளங்கிய சிவாசாரியரான வாட்போக்கி மாணிக்கப் பண்டிதரிடம் தம் ஆன்மார்த்த சிவலிங்கத்தினைக் கொடுத்தருளி, பக்குவ உயிர்களுக்கு தீக்கை செய்து அருளுமாறு ஆணையிட்டார். வாட்போகி மாணிக்கப் பண்டித சிவாசாரிய வழி விளங்கும் சிவாசாரிய ஆதீனமே கூனம்பட்டி ஆதீனமாகும்.

திருநந்திதேவர் பெருமானால் அருளப்பட்ட குருமரபென்பதனால் திருக்கைலாய பரம்பரை என்னும் சிறப்பும் உடையது. மாணிக்கவாசக சுவாமிகளின் குருமூர்த்தத்தினை வழிபடு தெய்வமாகக் கொண்டு நித்திய பூசை நிகழ்த்திவரும் ஆதீனம் இதுவாகும்.

சமணசமய மன்னன் ஒருவனின் கூனை நீக்கியதனால் கூனம்பட்டி என்றும், அம்மன்னனுக்கு திருமணம் செய்வித்தமையினால் கல்யாணபுரி என்றும் அழைக்கப்படும் மரபு உடையது. சைவசமயத்தை சாதாரண மக்களிடமும் கொண்டுசெல்ல வேண்டும் என்னும் ஒப்பற்ற அருள்நோக்கினால், பத்திமார்க்கத்தைப் பலப்படுத்தும் வகையில் மக்களிடையே சொற்பொழிவுகளையும் மேற்கொண்டுவரும் திருவருள் சிறப்பும், தம்மை நாடிவரும் பக்குவ உயிர்களுக்கு எந்தப்பேதமும் இன்றிச் சிவதீக்கைகள் செய்தருளும் குருத்துவச்சிறப்பும் உடையதாக ஆதீன குருமகாசந்நிதானம் விளங்குகின்றது.

57ஆம் குருமகாசந்நிதானம் பெருமானாரை சைவப்பெருமக்கள் அனைவரும் அணிதிரண்டு வரவேற்க வருமாறு வேண்டிக் கொள்வதோடு, அரங்கில் கலந்துகொண்டு திருவருளையும் குருவருளையும் பெற்றுக் கொள்ளுமாறு விழா ஏற்பாட்டாளர் குழுவினர் வேண்டிக் கொள்கின்றனர்.





தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சோபகிருது வருடம் மார்கழி மாதம் 18ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஜுமாதல் ஆகிறா பிறை 18

**குறள் தரும் சிந்தனை**



இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின்
கரப்பார் இரவன்மின் என்று

கையில் உள்ளதை மறைத்து இல்லை என்போரிடம் கையேந்த வேண்டாமென்று கையேந்துபவர்களையெல்லாம் கையேந்திக்கேட்டு கொள்கிறேன்.

# போதைப்பொருள் குற்றங்களை ஒழிக்க மக்களின் ஆதரவு அவசியம்

போதைப்பொருள் குற்றங்களும் துஷ்பிரயோகங்களும் நாட்டிற்கு பெரும் சவாலாகியுள்ளன. இது பல மட்டங்களதும் அவதானத்தைப் பெற்றுள்ளது. அதேநேரம் வன்முறைக் குழுக்களின் தோற்றத்திற்கும் பாதாள உலக குழுக்களின் உருவாக்கத்திற்கும் வித்திட்டுள்ள போதைப்பொருள் குற்றங்கள் கோஷ்டி மோதல்களுக்கும் மூல காரணமாக அமைந்துள்ளன. அவற்றின் ஊடாக அச்சுறுத்தப்படுதல், படுகொலைகள் உள்ளிட்ட இரத்தம் சிந்துதல்களுக்கும் கூட காரணமாக விளங்குகின்றன.

அத்தோடு போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களும் கூட பலவிதமான குற்றச்செயல்களில் ஈடுபடக் கூடியவர்களாக உள்ளனர். அதேவேளை போதைப்பொருள் துஷ்பிரயோகத்திற்கு அடிமையானவர்கள் உடல், உள ரீதியிலான ஆரோக்கிய கெடுதல்களுக்கும் முகம்கொடுக்கின்றனர். அவற்றுக்கு சிகிச்சை அளிக்கவும் பெருந்தொகைப் பணத்தை செலவிடுவது அவசியம். இவ்வாறு சமூக, கலாசார ரீதியில் மாத்திரமல்லாமல் ஆரோக்கிய ரீதியிலும் பலவிதமான பாதிப்புக்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் போதைப்பொருட்கள் எவ்வித நன்மையையுமே அளிக்கக்கூடியவை அல்ல. அதனால்தான் போதைப்பொருள் குற்றங்களில் இருந்து தம் பிள்ளைகளும் உறவினர்களும் மாத்திரமல்லாமல் முழு நாடும் மீட்டெடுக்கப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு பெற்றோர்களிடமும் நாட்டு மக்களிடமும் காணப்படுகிறது.

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளவர்கள் மேற்கொள்ளும் குற்றச்செயல்களும் குறைத்து மதிப்பிடக்கூடியவை அல்ல. அவர்களால் அவர்களது பெற்றோரும் உறவினர்களும் எதிர்கொள்ளும் நெருக்கடிகளும் துன்பங்களும் பலவிதமானவை. அதனால் போதைப்பொருள் குற்றங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும் என்பதே அனைத்துத் தரப்பினரதும் எண்ணமாக உள்ளது.

இவ்வாறான சூழலில் போதைப்பொருள் குற்றங்கள் தோற்றுவித்துள்ள நெருக்கடிகள் குறித்து அரசாங்கம் விஷேட கவனம் செலுத்தியுள்ளது. அதனை அடிப்படையாகக் கொண்டு போதைப்பொருள் குற்றங்களை முற்றாக ஒழிக்கும் நோக்கில் விஷேட வேலைத்திட்டமொன்று அண்மையில் முன்னெடுக்கப்பட்டது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மற்றும் பதில் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னக்கோனின் நேரடி கண்காணிப்பின் கீழ் 'யுக்திய' (நீதி) என்ற பெயரில் முன்னெடுக்கப்பட்ட இவ்வேலைத்திட்டம் நாடெங்கிலும் முன்னெடுக்கப்பட்டது. இதன் ஊடாக ஐஸ், கஞ்சா, மாவா, ஹசீஸ், ஹெரோயின் உள்ளிட்ட பல போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதோடு அவற்றோடு சம்பந்தப்பட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைக்கும் உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் போதைப்பொருள் குற்றங்களை முற்றாக ஒழிக்கும் நோக்கில் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டம் குறித்து பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு விடுததுள்ள அறிக்கையில், '14 நாட்கள் முன்னெடுக்கப்பட்ட இந்நடவடிக்கையின் கீழ் 85 கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதோடு 55 கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியான சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளன. இக்குற்றங்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 20,797 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் 1018 சந்தேக நபர்கள் தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் மேலதிக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வளவு பெறுமதியான போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டிருப்பது என்பது சாதாரண விடயம் அல்ல. அத்தோடு இக்குற்றச்செயல்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டிருப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகம். அதேவேளை போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாளவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 1298 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

போதைப்பொருள் குற்றங்களை கட்டுப்படுத்தவும் அக்குற்றங்களில் இருந்து நாட்டையும் மக்களையும் விடுவிக்கவும் என முன்னெடுக்கப்பட்டுள்ள இந்நடவடிக்கைகளை மக்கள் வரவேற்றுள்ளனர். இவ்விதமான குற்றங்கள் அற்ற தேசத்தை உருவாக்க வேண்டும் என்பதே அனைத்துத் தரப்பினரதும் எதிர்பார்ப்பாகும். அந்த வகையில் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை வரவேற்றுள்ள மக்கள், போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கவென முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையையும் பாராட்டியுள்ளனர்.

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களை மீட்கும் வகையில் முன்னெடுக்கப்படும் புனர்வாழ்வு வேலைத்திட்டங்களுக்கு அரசாங்கம் அதிக நிதியை செலவிட்டு வருகிறது. அதேபோன்றுதான் இப்பாவனையின் விளைவான நோய்களுக்கு உள்ளானவர்களுக்கு சிகிச்சை அளிக்கவும் செலவிடப்படுகிறது. போதைப்பொருள் குற்றங்களைக் கட்டுப்படுத்தும் போது அவற்றின் பாவனைக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கவும் சிகிச்சை அளிக்கவும் என பெருந்தொகை நிதியை செலவிட வேண்டிய தேவை ஏற்படாது.

ஆகவே போதைப்பொருட்களை முற்றாக ஒழிக்கவென முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் வெற்றிபெற ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கப்பட வேண்டும். அதுவே அனைத்துத் தரப்பினரதும் பொறுப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# பகவான் ஸ்ரீ ரமண மகரிஷியின் 144 ஆவது ஜெயந்திவிழா

பகவான் ஸ்ரீ ரமண மகரிஷியின் 144 ஆவது ஜெயந்திவிழா 28 டிசம்பர் 2023 அன்று திருவண்ணாமலை ரமணாச்சிரமத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. இதனை முன்னிட்டு எதிர்வரும் 7 ஆம் திகதியன்று இல. 41, விவேகானந்த வீதி, வெள்ளவத்தையில் மாலை 4 மணி தொடக்கம் 6 மணி வரை நிகழ்வு நடைபெறும்.


பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி 30 டிசம்பர், 1879ஆம் ஆண்டு மதுரை, திருச்சுழி எனும் சிற்றூரில் வாழ்ந்த சுந்தரம் ஐயர் – அழகம்மாள் தம்பதியினருக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தார். தாய் தந்தையர் இட்ட பெயர் வெங்கடராமன். 1892 இல் தந்தையின் திடீர் மரணத்தின் பின்னர் மதுரையில் உள்ள தன் சித்தப்பா வீட்டிலிருந்து படிப்பைத் தொடர்ந்தார்.

1896 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஒருநாள் தனிமையில் இருக்கும்போது மரணபயமும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட அனுபவமும் அவரின் வாழ்வில் ஓர் திருப்புமுனையாக அமைந்தன. அதைத் தொடர்ந்து 1896ஆம் ஆண்டு ஓகஸ்ட் 29 ஆம் திகதி வீட்டைவிட்டு வெளியேறி செப்டம்பர் மாதம் 1 ஆம் திகதி திருவண்ணாமலை வந்து, அருணாசலேச்வரர் திருக்கோவிலுக்கு விரைந்து கருவறை புகுந்து ஸ்ரீ அருணாசலேச்வரர் பாதாளலிங்கத்தின் முன் தன்னை மறந்த ஆனந்த பரவசத்தில் ஆழ்ந்தார்.

பின்னர் கோயிலைச் சூழ்ந்த பல இடங்களில் வசித்து விருபாட்ச குகையில் 1899 இல் வாசம் செய்தார். 1907 இல் காவ்ய கண்ட கணபதி சாஸ்திரி 'பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி' என்ற நாமத்தைச் சூட்டி போற்றினார். 1916 இல் பகவான் ஸ்கந்தாச்ரமத்திற்கு இடம்மாறினார்.1922 டிசம்பர் நடுப்பகுதியில் பகவான் தற்போதைய ஸ்ரீ ரமணாச்ரம ஸ்தலத்திற்கு வந்து நிரந்தரமாய் தங்கினார். 1949 இல் பகவானின் இடதுபுஜத்தில் புற்றுநோய் பரவியது. 1950 ஏப்ரல் 14 ஆம் திகதி இரவு 8.47 இற்கு தேகவியோகமானார். அத்தருணம் ஒரு பெரிய எரிநட்சத்திர ஜோதி வானவெளியில் தோன்றி அண்ணாமலை உச்சியில் மறைவதை இந்தியாவிலும் இலங்கையிலும் பலர் அவதானித்தனர் எனக் கூறப்படுகிறது.

பகவான் ரமணரின் 144 ஆவது ஜெயந்தி நிகழ்வுகள் பல இடங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

"மனத்தின் இருப்பை எவ்வாறு தெரிந்து கொள்கிறோம்? அதன் இயக்கமாம் எண்ணங்களாலேயே. எண்ணங்கள் எழவெழ, அவையாவும் இறைவனின் தோற்றங்களே என்று அவரோடு அவற்



றைச் சேர்ப்பித்துவிட்டால், அதுவே இறைவனை சரணடைதலாம். இறைவனுக்கு அந்நியமாய் எதுவுமில்லை. எல்லாம் அவன் செயல் எனில், மேலே நினைப்பதற்கு ஒன்றுமே இல்லை. அதுவே பக்தி, முத்தி, சரணடைதல், ஞானம் யாவுமாம்" என்கிறார் பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி.

இதன் சாராம்சமாகக் கூறுவது என்னவெனில், நிரந்தரமான சமாதானத்தை நிரந்தரமற்ற ஒன்றிலிருந்து பெற முயல்வதை விடுத்து, நிரந்தரமான அந்த ஆன்மாவில் (பரம்பொருளில்) எண்ணமயமாய் விளங்கும் நிரந்தரமற்ற அகந்தை நானைக் கரைத்தலே வழி என்பதாம். அப்பொழுது எஞ்சி இருப்பது அதுவே என்பதாம். எதுவாயும் ஆகாமல் இருத்தலே நாம் அதுவாய் இருத்தல்.

பகவானின் வாய்மொழிகளை மேலும் விளங்கி அனுஷ்டிக்க விரும்பும் அன்பர்கள், ஒவ்வொரு ஞாயிறுதோறும் மாலை 4 மணி தொடக்கம் 6 வரை, 41, விவேகானந்த வீதி, வெள்ளவத்தையில் இயங்கும் கொழும்பு – ரமண பீட நிகழ்வில் பங்குகொள்ளலாம் என்பதை அறியத்தருகின்றோம்.

**ரமண அன்பர்...**
**(077 843 9029)**

# விபுலாநந்த அடிகளாருக்கு சிட்னியில் திருவுருவச்சிலை

சிட்னியில் வாழும் காரைதீவைச் சேர்ந்த 'உதயசூரியன்' மாணவர் உதவி மையத்தின் தலைவரும், "உதயசூரியன்" பத்திரிகையின் நிர்வாக ஆசிரியருமான பரோபகாரி நாகமணி குணரெத்தினம் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாருக்கு சிலை நிறுவுகிறார். சுவாமிகள் பிறந்த இலங்கைக்கு வெளியே முதல் தடவையாக கடல் கடந்த நாடுகளில் சுவாமிகளின் திருவுருவச் சிலை நிறுவப்படுவது இதுவே முதன் முறையாகும்.



இச்சிலை சுவாமி விபுலானந்த அடிகளாரின் 132 ஆவது ஜனன தினமான 27.03.2024 ஆம் திகதியை அடுத்துவரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிட்னி மாநகரில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இச்சிலை திறப்புவிழாவிற்கு உலகநாடுகளிலிருந்து குறிப்பாக இந்தியா, இங்கிலாந்து, கனடா, சிங்கப்பூர், மலேசியா, பிரான்ஸ், இலங்கை போன்ற நாடுகளிலிருந்து பல பேராளர்கள் சிட்னிக்கு வருகை தரவிருக்கின்றனர். சுவாமி விபுலாநந்தஅடிகளார் பிறந்த காரைதீவிலிருந்து சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்ற முன்னாள் தலைவரும், ஆலோசகருமான வி.ரி. சகாதேவராஜா தலைமையிலும், மட்டக்களப்பிலிருந்து மட்டக்களப்பு தமிழ் சங்கத் தலைவர் வி.ரஞ்சிதமூர்த்தி மற்றும் முன்னாள் வலயக்கல்விப் பணிப்பாளர் க.பாஸ்கரன் தலைமையிலும் இச்சிலை திறப்பு விழாவில் பங்கேற்பாளர்கள் கலந்து கொள்ள ஏற்பாடாகியுள்ளது. சுவாமியின் அபிமானியும், எழுத்தாளரும் சமூகசேவையாளருமான அவுஸ்திரேலியாவின் தலைநகர் சிட்னியில் வாழும் காரைதீவைச் சேர்ந்த நா.குணரெத்தினம் இவ்வெண்கலச்சிலையை நிறுவியுள்ளார்.

சிலைதிறப்புவிழாவின் போது 'சிட்னியில் அடிகளார் படிவமலர்' எனும் சிறப்பு மலரும் வெளியிடப்படவிருக்கிறது.

தனது பெற்றோரான காரைதீவைச் சேர்ந்த பொன்னம்பலம்_ நாகமணி தம்பதிகள் நினைவாகவும், தனது வளர்ப்புத் தந்தை காத்தமுத்து வேல்நாயகம் (தலைமை ஆசிரியர்) தம்பதிகளின் நினைவாகவும் இச்சிலை நிறுவப்படுவதாக அவர் தெரிவித்தார்.




**(காரைதீவு குறூப் நிருபர்)**

# காஞ்சிரங்குடாவில் சிறப்பாக நடைபெற்ற வதிவிட தலைமைத்துவப் பயிற்சி முகாம்

இளைஞர், யுவதிகள் கலந்து கொண்ட மூன்றுநாள் வதிவிட இளைஞர் முகாமொன்று அண்மையில் அம்பாறை மாவட்டத்தில் நடைபெற்றது. இளைஞர்களிடையே பரஸ்பர நல்லிணக்கத்தையும் இனங்களுக்கிடையே ஐக்கியத்தையும் கொண்ட ஒழுக்கமுள்ள சமுதாயமொன்றை உருவாக்குவதை நோக்காகக் கொண்டு ஒழுங்கு செய்யப்பட்ட இந்த இளைஞர் முகாம் காஞ்சிரங்குடா கால்நடைவளர்ப்பு பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

அக்கரைப்பற்று அமான் ஸ்ரீலங்கா அமைப்பினர் அமான் இந்தோனேசியாவின் அனுசரணையுடன் ஒழுங்குசெய்த இந்த இளைஞர் முகாம் அமைப்பின் தலைவர் யு.எல்.எம்.ஹாஷிம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் மூவினங்களையும்ளையும் சேர்ந்த இளைஞர்களும் யுவதிகளும் மிக



உற்சாகத்துடன் வருகை தந்திருந்தனர்.

அமைப்பின் தலைவர் ஹாஷிம் தனது தொடக்க உரையில், கலந்துகொண்ட அனைவரையும் வரவேற்றதோடு இந்த முகாமில் வளவாளர்களால் வழங்கப்படும் உரைகளை சிரத்தையோடு செவிமடுத்து பயன்பெறுமாறு கேட்டுக் கொண்டார்.




அதனையடுத்து இன்றைய இளைஞர்கள் மத்தியில் காணப்படுகின்ற போதைப் பொருள்பாவனைபற்றியும்அது எவ்வாறு சமூகத்தை பாதித்துள்ளது என்பது பற்றியும் விரிவாக ஆராயப்பட்டதுடன், அதனை எவ்வாறு கட்டுப்படுத்தலாம் என்பது பற்றியும் அவர்கள் கலந்துரையாடினர். மாணவர்களின் ஒழுக்க விழுமியங்கள், தீவிரவாதம், பயங்கரவாதம் போன்றவை தொடர்பாக இளைஞர்களுக்கு விரிவாக விளக்கமொன்றை கிழக்கு மாகாண உளவளத்துறை அதிகாரி எம். எஸ்.எம் இக்ராம் விளக்கினார்.

இதனைத்தொடர்ந்து திருக்கோயில் வலயக்கல்வி அலுவலக முன்பள்ளி இணைப்பாளர் எஸ். விவேகானந்தராஜா இளைஞர்களின் ஆளுமைகள் தொடர்பாக விரிவாக விளக்கினார். இலங்கை மனித உரிமைகள் ஆணைகுழுவின் பிராந்திய இணைப்பாளர் எ.சீ.ஏ அஸீஸ் மற்றும் திருக்கோயில் வலயக்கல்வி பணிப்பாளர் ஆர்.உதயகுமார் ஆகியோர் தமது விளக்கவுரைகளை நடத்தினார், இளைஞர்களையும்.யுவதிகளையும் மைதானத்திற்கு அழைத்து சென்று பயிற்சிகளையும் வழங்கினர்.

இரண்டாம் நாள் நிகழ்வு வெள்ளிக்கிழமையாக இருந்தபடியால் இங்கு ஜும்மா தொழுகையும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஜும்மா கொத்பா பேருரையை மௌலவி எ.ஜி. பௌசுர் ரஹ்மான் (சஹ்தி) நிகழ்த்தினார்.

இதனையடுத்து தம்பிலுவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுலம் பணிப்பாளர் கன. இராசரத்தினம் (கண்ணன்) அவர்களின் இந்துமத நல்லுபதேசமும் நடைபெற்றது. அதனையடுத்து பௌத்த சமய உரையும் இடம்பெற்றது. இந்நிகழ்வுகள் அனைத்திலும் இளைஞர்கள், யுவதிகள் அனைவரும் உற்சாகத்துடன் பங்கேற்றனர். அக்கரைப்பற்று உம்முதர்தா அரபுக் கல்லூரியின் அதிபர் கலாநிதி எம். ஐ. எம். சித்தீக் (அல்அஷாரி) சிறப்புரை ஆற்றினார்.

இரண்டாம், மூன்றாம் நாள் நிகழ்வுகளில் அக்கரைப்பற்று ஆதார வைத்திய சாலை வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ரீ.எஸ்.ரீ.ஆர். ராஜா ப், உதவிக் கல்விப்பணிப்பாளர் கலாநிதி எம். ஐ.எம்.ஹனிபா, வைத்திய கலாநிதி டொக்டர் பருஸா நக்பார் ஆகியோர் வளவாளர்களாக கலந்துகொண்டு அரசியலமைப்புச் சட்டம், உளச்சார்பு, தலைமைத்துவம், ஆளுமை விருத்தி, சமய நல்லிணக்கம், சமாதான சகவாழ்வு, மனிதஉரிமை போன்ற தலைப்புகளில் விரிவான விரிவுரைகளை நடத்தின. இறுதிநாள் நிகழ்வில் திருகோணமலை மாவட்ட மேல்நீதிமன்ற நீதிபதி அல்ஹாபீஸ் என்.எம்.அப்துல்லாஹ், கால்நடை அபிவிருத்தி திணைக்களக்கள மாகாணப் பணிப்பாளர் டொக்டர் எம்.ஏ. நதீர் ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்துகொண்டு இளை ஞர், யுவதிகளுக்கான சான்றிதழ்களை வழங்கினர்.

நேரமுகா மைத்துவம் அங்கு சிறப்பாகப் பே ணப்பட்டது. தலைவர் ஹாஷிம் நேரமு காமைத்துவத்தில் மிகவும் கண்டிப்புடன் செயற்பட்டார்.

**கலாபூஷணம் எம்.ஏ. பகுர்டீன்**
**(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)**

# மூதூர் பிரதேச செயலக கலை இலக்கிய விழாவில் கலைஞர்கள் கௌரவிப்பு; 'முத்து' நூல் வெளியீடு

மூதூர் பிரதேச செயலகம் மற்றும் பிரதேச கலாசார சபை இணைந்து ஏற்பாடு செய்திருந்த மூதூர் பிரதேச கலை இலக்கியவிழா அண்மையில் மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம்.முபாரக் தலைமையில் தோப்பூர், முஸ்லிம் மகளிர் கல்லூரி மண்டபத்தில் வெகுவிமரிசையாக நடைபெற்றது.

2023 இற்கான இவ்விழாவில் 25 சிரேஷ்ட கலைஞர்கள், 15 இளம் கலைஞர்கள், பிரதேச மட்டம், மாவட்ட மட்டங்களில் இலக்கிய விழாவை முன்னிட்டு நடத்திய பல்வேறு போட்டிகளிலும் வெற்றி பெற்ற நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் ஆகியோர் விருதுகள், பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வானது மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம். முபாரக்கின் சிறப்பான வழிகாட்டலுடன் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடைபெற்றது. மூதூர் பிரதே செயலகம் வருடாந்தம் பிரதேச கலாசார விழாவை வெகுவிமரிசையாக நடத்தி வரும் நிலையில், முத்து சஞ்சிகையானது விழாவின் வரலாற்று சுவடுகளை அடுத்து வரும் தலைமுறையினருக்கு எடுத்துச்செல்லுமென்று பிரதேச செயலாளர் முபாரக் தெரிவித்தார்.

இதேவேளை இவ்விழாவில் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு மற்றும் மூவின சமூக மாணவர்களின் கலை கலாசார நிகழ்வுகள் யாவுமே மிகச் சிறப்பாக அமைந்திருந்தன.

இவ்விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய திருமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த கெட்டியாராச்சி "பல்லின சமூக மக்களும் பரஸ்பரம், புரிந்துணர்வு நல்லிணக்கத்துடன் ஒன்றிணைந்து வாழும் இப்பிரதேசத்தில் செழுமைமிக்க வாழ்வியல் மரபுகளை கலைஞர்கள் இலக்கிய பிரவேசங்கள் ஊடாக வெற்றி கொண்டுள்ளனர்" எனத் தெரிவித்தார்.





**எஸ்.கஸ்ஸாலி**
**(மூதூர் தினகரன் நிருபர்)**

# அன்னை மரியாள் இறைவனின் தாய்

## ஜனவரி முதலாம் திகதி திருச்சபை சிறப்பித்தது




புதிய ஆண்டு என்றாலே மனதிற்குள் புத்துணர்ச்சி. புதியது என்று சொன்னாலே பலருக்கும் மனதிற்குள் மகிழ்ச்சி பொங்கும் புதிய உடை புதிய உணவு, புதிய வீடு வாகனம் என புதியவை அனைத்துமே மனதிற்கு நிறைவினையும் மகிழ்ச்சியினையும் தரும்.

2023 ஆம் ஆண்டு பல விதமான நல் உறவுகளையும் உணர்வுகளையும் நமக்கு வழங்கியுள்ளது. நன்மை மட்டுமன்றி ஏராளமான இடர்ப்பாடுகளையும் இன்னல்களையும் கொண்டதாக இவ்வாண்டு இருந்தது. போரினாலும் மோதலினாலும் பல்வேறு நாடுகளின்



மக்கள் துன்புற்றனர், இன்றும் துன்புற்று வருகின்றனர். துன்பம் ஒருபோதும் முடிவாகாது. இன்பமே வாழ்வின் நிறைவாக இருக்கும்.

வாழ்வில் நமக்கு ஏற்படும் துன்பங்கள் அனைத்தும் ஒரு சூழலே தவிர அதுமட்டுமே வாழ்க்கையல்ல என்பதை வாழ்வின் சூழல்கள் நமக்கு உணர்த்துகின்றன. தான் பெற்று வளர்த்த குஞ்சுகளையே ஒரு பருவம் வந்ததும் தன்கூட்டிலிருந்து கீழே தள்ளி பறக்க வைக்கும் பறவைகள் போல நம்மையும் ஒரு சூழலுக்குள் அனுப்பி அதிலிருந்து வாழ்க்கை என்றால் என்னவென்று கற்றுக்கொள்ள அழைக்கின்றார் இறைவன்.

பறவைக்குஞ்சுகளை கூட்டிலிருந்து தள்ளிவிட்டு பறக்க பழக்கப்படுத்தும் தாய்ப்பறவை ஒருபோதும் தனது குஞ்சுகளை மறந்து விடாது. அது முழுதாக பறக்கக் கற்றுக்கொள்ளும் வரை அதனோடு அதன் அருகில் இருந்து ஊக்கப்படுத்தும்.

ஐந்தறிவு கொண்ட பறவையினத்திற்கே தன் பிள்ளைமேல் இவ்வளவு பாசமும் அக்கறையும் இருக்கும் போது அன்னைக்கெல்லாம் அன்னையான நம் தாய் மரியா சிலுவை அடியில் நம் அனைவருக்கும் தாயாகும் பொறுப்பை ஏற்றுக்கொண்டவர். நமது வாழ்வின் சொல்லும் செயலும் துவக்கமும் துடிப்பும் அன்னையின் அருகிருப்பிலேயே நடக்க வேண்டும் என்ற எண்ணத்தால் தான் ஒவ்வொரு ஆண்டின் துவக்கமும் அன்னை மரியாள் இறைவனின் தாய் என்ற பெருவிழாவாகக் கொண்டாடப்படுகின்றது.

அன்னை மரியாள் அகிலத்தில் உள்ள அனைவரின் தாய். அவராலேயே, அவரின் ஆசீயாலேயே நமது வாழ்வின் அனைத்து நிகழ்வுகளும் நடைபெறுகின்றன.

வானளவு உயர்ந்த உள்ளம் கொண்டவராகவும், கடலளவு அளவற்ற கருணை கொண்டவராகவும், வெறுப்பைக் காட்டாது அன்பை மட்டுமே அள்ளிக் கொடுக்கும் அமுத சுரபியாகவும் திகழ்பவர் நம் அன்னை மரியாள்.

இத்தகைய அன்னை மரியாள் இறைவனின் தாய் என்ற பெருவிழாவை புத்தாண்டின் துவக்கத்தில் கொண்டாட இருக்கும் நமக்கு மரியாள் இறைவனின் தாய் என்ற ஆண்டின் தொடக்கம் என்பது மனித உள்ளங்களுக்குப் புத்துணர்ச்சியை தரக்கூடியது.

அதனால் தான் உலகில் வாழும் எல்லா மக்களும் புத்தாண்டை மிகவும் சிறப்பாக மகிழ்வுடன் கொண்டாடுகின்றார்கள். ஆண்டின் தொடக்கம் எப்படி அமைகிறதோ அதுபோலவே அந்த வருடம் முழுவதும் அமையும் என்று பெரும்பாலானோர் எண்ணுகின்றார்கள். அதனால் தான் அந்த புதிய ஆண்டின் துவக்கத்தில் தங்களையும் தங்களைச் சுற்றி உள்ளவர்களையும் மகிழ்வாக வைத்திருக்க விரும்புகின்றார்கள். அல்லது தங்களுக்கு மகிழ்வைத்தரும் இடங்களுக்குச் சென்று மகிழ்கின்றனர்.

புதிய ஆண்டினை நல்லவிதமாக வரவேற்கவும் நமக்கு இறையருளால் கொடுக்கப்பட்டிருக்கும் இப்புதிய ஆண்டை மகிழ்வுடன் வரவேற்கவும், 7 முக்கியமான கேள்விகளை நமக்குள் நாம் கேட்டுக்கொள்வோம்.

1,நான் நன்றியுணர்வுடன் ஏற்கின்றேனா? 2.எனது அன்றாட வாழ்க்கைப் பழக்கத்தில் நான் எதை மாற்ற விரும்புகின்றேன்? 3.எனது உணர்வுகளில் எதை நான் சரிசெய்ய விரும்புகின்றேன்? 4.இந்த புதிய ஆண்டில் நான் என்ன கற்றுக்கொள்ளப்போகின்றேன்? 5.குற்ற உணர்வுடன் வாழ்கின்றேனா பிறரை மன்னித்து வாழ்கின்றேனா? 6.என்னையும் எனது செயல்களையும் விமர்சனத்திற்கு உட்படுத்தி அதனை சரிசெய்ய முயல்கின்றேனா? 7. எனது நல்வாழ்வைப் பற்றிய எண்ணம் தொலைநோக்குப் பார்வை எனக்கு உள்ளதா? என்பன போன்ற கேள்விகளை நமக்குள் நாம் எழுப்பிக் கொள்வோம்.

கல்லில் சிலையாய், மண்ணில் மலையாய் என்றும் உயர்ந்தே இருப்போம். புதிதாய் பிறந்தோம் என்றும் நம் உள்ளம் நினைக்க, பூக்களின் நறுமணமாக நம்பிக்கை நம் உள்ளங்களில் நிலைக்க, நல்லதொரு நாளாய் ஒவ்வொரு பொழுதும் விடிய மனதின் ஆசைகள் மாற்றமின்றி நிறைவேற இன்முகத்துடன் புத்தாண்டை வரவேற்போம்.

நன்மைகள் பலவற்றை காணும் ஆண்டாக புத்தாண்டு அமையட்டும். இன்று பூத்த மலரின் வாசமாய் உங்கள் நேசம் அனைவருக்கும் கிடைக்கட்டும். இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்.

**மெரினா ராஜ்**

# அனைத்து உள்ளங்களிலும் கருணையும் அன்பும் பிறக்கட்டும்

## பாப்பரசரின் அமைதிக்கான தூதுவர் கர்தினால் க்ரயேவிஸ்கி



நம்மைக் குறித்த கடவுளின் விருப்பத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் நம் பாதைக்கு முக்கியத்துவம் கொடுப்பதாலேயே துன்பங்களும் மோதல்களும் அதிகரிக்கின்றன என கர்தினால் கொன்ராட் க்ரயேவிஸ்கி தெரிவித்துள்ளார்.

திருத்தந்தையின் பிறரன்பு நடவடிக்கைகளுக்கு பொறுப்பான கர்தினால் க்ரயேவிஸ்கி,திருத்தந்தையின் பிரதிநிதியாக அண்மையில் காஸா பகுதிக்குச் சென்று திரும்பியபின் அளித்த பேட்டியின்போதே இவ்வாறு தெரிவித்தார்.

போர் இடம்பெறும் புனித பூமிக்கு திருத்தந்தையின் சார்பாக கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தில் கலந்துகொள்ளச் சென்ற போது அங்கு துன்ப துயர்களையும் பகைமையையும் வெறுப்புணர்வுகளையும் மனிதனை மனிதன் கொல்வதையும், தண்ணீர், உணவு, மின்சாரம் இல்லா நிலைகளையும், கிறிஸ்து பிறப்பு காலத்தில்கூட போர் நிறுத்தம் இல்லாமையையும் கண்டதாக கவலையுடன் தெரிவித்தார் கர்தினால்.

உலகின் மிகவும் பலம் வாய்ந்த ஆயுதங்களான விசுவாசம் மற்றும் செபத்துடன் புனித பூமிப் பகுதிக்குச் சென்று, அங்கு இயேசு வாழ்ந்த அனைத்து இடங்களையும் சந்தித்தவேளையில் ஏன் அங்கு அமைதியை காணமுடியவில்லை என்ற கேள்வியே தன்னில் தொக்கி இருந்ததாகக் கூறும் கர்தினால் க்ரயேவிஸ்கி, கிறிஸ்மஸ் காலத்தில் கூட காசாவிலும் உக்ரைனிலும் போரும் கொலைகளும் தொடர்ந்து கொண்டிருப்பது வேதனையைத் தருவதாக உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இயேசுவின் கல்லறைக்குச் செல்ல நாம் குனிந்துதான் செல்லவேண்டும் என்பதுபோல் பெத்லகேமிலும் மறையுண்மைக்கு முன்னால் நாம் குனிந்தே செல்லவேண்டும் என்பதை மனிதகுலம் மறந்து வாழ்வதால் இத்தகைய பிரச்சினைகள் இடம்பெறுகின்றன என்ற கர்தினால், கடவுளின் இடத்தில் மனிதகுலம் தன்னை நிறுத்தி, ஆணையிடவும் அதிகாரம் காட்டவும் முயலும்போது, அங்கு கருணையையும் அன்பையும் விலக்கிவிடுவதால் அமைதியின்மை உருவாகிறது என்றார்.

இறைவனின் மறையுண்மைகளை நாம் புரிந்துகொள்ளவும், அவரின் அன்பையும் இரக்கத்தையும் உணர்ந்து கொள்ளவும், தாழ்ச்சி என்ற உயர்பண்பு நமக்குத் தேவை என்பதையும் சுட்டிக் காட்டினார் கர்தினால் க்ரயேவிஸ்கி.

**கிறிஸ்டோபர் பிரான்சிஸ்**




## கிறிஸ்மஸ் நள்ளிரவு திருப்பலி







இயேசு கிறிஸ்துவின் பிறப்பினைக் குறிக்கும் கிறிஸ்மஸ் நள்ளிரவு திருப்பலி மட்டக்களப்பு மட்டக்களப்பு புனித மரியாள் பேராலயத்தில் மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகையின் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. பாலன் பிறப்பினை குறிக்கும் வகையில் ஆயரினால் பாலகன் இயேசுவின் திருச்சுரூபம் கிறிஸ்மஸ் குடிலில் வைக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டது. கறோல் கீதம் இசைக்கப்பட்டு, கிறிஸ்மஸ் பண்டிகைக்கான விசேட திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டதுடன் புனித மரியாள் பேராலயத்தின் பங்குத்தந்தை ஜோர்ஜ் ஜீவராஜ் அடிகளார், அருட்சகோதரிகள், பொது நிலையினர், பெருமளவு விசுவாசிகள் திருப்பலியில் கலந்துகொண்டிருந்தனர். (படங்கள்: கல்லடி குறூப் நிருபர்)

# ஆண்டவருடைய பாதுகாப்பு, கருணை, சமாதானம் அனைவருடனும் தங்குவதாக

## புனித பிரான்சிஸ் சேவியர் ஆலய புது வருட சிறப்புத் திருப்பலியில் அருட்தந்தை ஷிவந்த றொட்ரிகோ



புதிய வருடம் பிறந்துள்ளது. இந்த புதிய வருடத்திலே நாம் ஒவ்வொருவரையும் வாழ்த்தும்போது அவர்களை ஆசிர்வதிக்கின்றோம்.

பிறந்துள்ள புது வருடம் மிகவும் சிறப்பாக அமையும் என்ற எதிர்பார்ப்பு எங்கள் மனங்களிலே காணப்படவில்லை என்பதைக் குறிப்பிட வேண்டும். ஏனென்றால் இந்த வருடத்தில் நாம் பல்வேறு சவால்களையும் கஷ்டங்களையும் எதிர்கொள்ள நேரும். அந்த வகையில் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலேயே வரிச் சுமையொன்று சுமத்தப்பட்டுள்ளது.

ஜனவரி முதலாம் திகதியில் ஆண்டவரின் தாய் கன்னி மரியாள் திருவிழாவினையும் கத்தோலிக்கத் திருச்சபை சிறப்பிக்கின்றது.

பிறந்துள்ள குழந்தை இயேசுவை சந்தித்து நம் வரலாற்று மூதாதையர்கள் வாழ்த்துவதை நாம் பரிசுத்த வேதாகமத்தில் காண முடிகிறது.

அந்த வாழ்த்துக்கள் இறைவனால் வழங்கப்படுகின்ற ஆசீர்வாதம்.

அந்த ஆசீர்வாதம் நம் வாழ்க்கைக்கு பாதுகாப்பாக அமைகிறது. அனைத்து எதிரிகளிடமிருந்தும், வாழ்க்கையில் நாம் முகம் கொடுக்கப் போகும் போராட்டங்களில் இருந்தும், கஷ்டங்களில் இருந்தும் எம்மை அந்த ஆசீர்வாதம் பாதுகாக்கின்றது. இரண்டாவதாக அந்த ஆசீர்வாதம் இறைவனின் கருணையை நமக்குப் பெற்றுத் தருகின்றது. அவரது கருணை அவரது அன்பை அடிப்படையாகக் கொண்டது. அந்த அன்பு எமது வாழ்க்கையில் மிகவும் முக்கியமானதாகும்.

இன்றும் அந்த அன்பிலும் கருணையிலும் தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

மூன்றாவது ஆண்டவரிடமிருந்து நமக்கு கிடைக்கின்ற அமைதியும் சமாதானமும்.

சமாதானம் என்பது எல்லா தரப்புக்கும் முக்கியமானது. வாழ்க்கையில் நாம் சந்திக்கும் போராட்டங்களின் போது அவரது சமாதானமும் அமைதியும் எம்மை பண்படுத்துகின்றது. அதனால் தான் புது வருடத்தை நாம் உலகத்தின் சமாதான தினமாகவும் கருதுகின்றோம். அந்த வகையில் புதிய வருடத்தில் நாம் ஆண்டவரின் பாதுகாப்பு, கருணை மற்றும் சமாதானத்தை நிறைவாகப் பெற்றுக் கொள்கின்றோம். அவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு நாம் தகுதி உள்ளவர்களாக என்ன செய்ய வேண்டும் என்பதை பரிசுத்த வேதாகமத்தின் இரண்டாம் வாசகம் எமக்குத் தெளிவு படுத்துகின்றன. அதைப் பெற்றுக் கொள்வதற்கான தகுதியையும் அவரிடமிருந்தே நாம் பெற்றுக் கொள்கின்றோம்.

அந்த வகையில் அவரிடமிருந்து கிடைக்கும் ஆசீர்வாதத்தின் மூலம் நாம் அவரது உரிமையின் பங்காளிகளாகின்றோம். அதனால் தான் இந்த உலகில் நாம் பயமின்றி வாழ்கின்றோம்.

ஆங்கில பத்திரிகை ஒன்றிலே நான் வாசித்த கட்டுரையில் அறிஞர் ஒருவர் நாம் இறைவன் நமக்கு செய்கின்ற அனைத்திற்கும் நன்றி சொல்ல வேண்டும் என்றும் அவரது வார்த்தைக்கு நாம் ஆம் என்று பதில் சொல்பவர்களாக இருக்க வேண்டும் என தெரிவிக்கின்றார். உண்மையில் கடந்த வருடத்தை நாம் எடுத்துப் பார்த்தால் நாம் துன்பங்களை மட்டுமா சந்தித்தோம்? பிரச்சினைகளையும் பாதிப்புகளையும் மட்டுமா எதிர்கொண்டோம்?

கடந்த வருடத்திலேயே ஆண்டவரின் ஆசீர்வாதத்தின் மூலம் எங்கள் குடும்பங்களில் இடம்பெற்றுள்ள நன்மைகள் என்ன? எங்கள் வாழ்க்கையிலே இடம்பெற்றுள்ள நன்மைகள் என்ன என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாம் சாதித்தவைகளையும் பெற்றுக் கொண்டுள்ள வரப்பிரசாதனங்களையும் நாம் மறக்க கூடாது. அதற்காக ஆண்டவருக்கு நன்றி கூற வேண்டும்.

மரியன்னையும் சூசையப்பரும் இயேசு பிறந்த போது அனுபவித்த, எதிர்கொண்ட கஷ்டங்கள், போராட்டங்கள் எண்ணில டங்காதவை எனினும் அவர்கள் ஆண்டவருடன் பய





ணித்தனர். அதேபோன்று பிறந்துள்ள இந்த வருடத்திலும் ஆண்டவர் எங்களைக் கைவிட மாட்டார். எங்களது அனைத்து பொருளாதார கஷ்டங்களிலும், வாழ்க்கைப் போராட்டத்திலும் அவருடைய பாதுகாப்பும் கருணையும் சமாதானமும் எம்மோடு இருக்கும் என்பதை நாம் முழு மனதுடன் விசுவாசித்து நம்ப வேண்டும்.

**லோரன்ஸ் செல்வநாயகம்**

# கிழக்கின் குரல்



## மரங்கள் அடியோடு வீழ்ந்து பாடசாலைக்கு பெரும் அனர்த்தம்

சம்மாந்துறை அல் அஸ்ஹர் வித்தியாலயத்தில் பாரிய மரங்கள் அடியோடு வீழ்ந்து பாடசாலை பெரும் அனர்த்தத்திற்குள்ளானது.

நேற்று முன் தினம்(31) மாலை வீசிய பலத்த காற்று மற்றும் கனமழை காரணமாக சம்மாந்துறை அல்ஹர் வித்தியாலயத்தில் இருந்த நான்கு பாரிய மரங்கள் வீழ்ந்து பாடசாலைக்கு பெரும் அனர்த்தத்தை விளைவித்துள்ளது என அதிபர் ஏ.அப்துல் ரஹீம் தெரிவித்தார்.

பாரிய ஆலமரம் உள்ளடங்களாக நான்கு மரங்கள் அடியோடு சாய்ந்து மூன்று பாரிய கட்டிடங்கள் பெரும் சேதத்துக்குள்ளாகின.

அண்மையிலே திறந்து வைக்கப்பட்ட இரண்டு மாடிக்கட்டிடமும் அதில் பாரிய சேதத்துக்குள்ளானது. 20 அளவிலான புதிய கொட்டகை கட்டிடம் ஒன்றும் மாணவர் தளபாடங்கள் சகிதம் தரைமட்டமாகியது. மின்சார கம்பம் ஒன்றும் அடியோடு வீழ்த்தப்பட்டது .

இவ் அனர்த்தம் பற்றி கேள்வியுற்றதும் சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா கோட்டக் கல்விப்பணிப்பாளர் ஏ. நசீர் உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா உள்ளிட்ட குழுவினர் நேற்று(1) காலை சென்று பார்வையிட்டனர். இதேவேளை சம்மாந்துறை கோட்ட கல்வி பணிப்பாளர் ஏ. நசீர் இந்த அனர்த்தம் தொடர்பாக கேள்விப்பட்ட மறுகணம் அம்பாறை மாவட்ட செயலகம் அனர்த்த முகாமைத்துவ பிரிவு சம்மாந்துறை பிரதேச செயலாளர் பிரதேச சபை மற்றும் வலயக்கல்விப் பணிமனை ஆகிய நிறுவனங்களுக்கு தகவலை வழங்கி மரங்களை அகற்றும் பணிக்கு உதவியிருக்கின்றார்.

இராணுவம் மற்றும் குறித்த தரப்பினரும் விரைந்து மரங்களை அகற்றும் பணியில் ஈடுபட்டனர். ஒரு கோடி ரூபாய்க்கு மேல் சேதம் விளைவித்திருக்கிறது என்று வலயக்கல்விப் பணிமனையின் கட்டிடங்கள் பிரிவு தெரிவிக்கின்றது.

நேற்று(1)பகல் வரை இந்த மரங்கள் முற்றாக அகற்றப்படவில்லை. அந்தப் பணிகள் தொடர்ச்சியாக இடம் பெற்றன.



## கிழக்கு மாகாண அபிவிருத்திக்கு ரூ. 48,223 மில்லியன் ஒதுக்கீடு

(அம்பாறை மாவட்ட குறூப் நிருபர் )

கிழக்கு மாகாண வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக 48,223 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டிற்கான ஆவணத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கையொப்பம் இட்டுள்ளதாகவும் குறித்த நிதி ஒதுக்கீட்டின் மூலம் மேற்கொள்ளப்படவுள்ள 101 நலத் திட்டங்களும் கிழக்கு மாகாண ஆளுநரால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாகவும் ஆளுநர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

2024ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்தின் வளர்ச்சி, மேம்பாடு மற்றும் அபிவிருத்திகளுக்காக மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் 48,223 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டிற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் அதற்கான ஆவணத்தில் ஆளுநர் நேற்று (01) கையொப்பமிட்டதன் மூலம் அதற்கான அனுமதியினையும் மாகாண ஆளுநர் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை, 2024 ஆம் வருட புத்தாண்டை முன்னிட்டு குறித்த நிதி ஒதுக்கீட்டின் மூலம் முதற் கட்டமாக பல்வேறு துறைகளையும் உள்ளடக்கியதாக திட்டங்கள் மேற்கொள்ளப்பட உள்ளதாகவும் ஆளுநர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அதன் அடிப்படையில் முதலமைச்சின் அமைச்சு மற்றும் உள்ளூராட்சி மன்றம் , கிராமிய அபிவிருத்தி, கிராமிய கைத்தொழில், விவசாயம் மற்றும் கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், போக்குவரத்து ஆணையம், சுற்றுலா பணியகம்,கட்டிடத்துறை வீட்டுவசதி ஆணையம், மாகாண திட்டமிடல் செயலகம், மாகாண பொது நிர்வாகம், கூட்டுறவு அபிவிருத்தி, மீன்பிடி அமைச்சு, கல்வி மற்றும் கலாச்சார, முன்பள்ளி கல்வி பணியகம், விளையாட்டு அமைச்சு, சுகாதார மற்றும் சுதேச மருத்துவத் துறை, சிறுவர் நன்னடத்தை மற்றும் சமூக சேவைகள் அமைச்சு, வீதி அபிவிருத்தி மற்றும் காணி அமைச்சுக்களை உள்ளடக்கியதாக மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி திட்டங்களின் முதற்கட்ட அங்குரார்ப்பண வேலைகளை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நேற்று(1) ஆரம்பித்து வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## மட்டக்களப்பு புளியந்தீவு கோட்டிப் பிள்ளையார் ஆலய புதுவருட பூசை



(மட்டக்களப்பு விசேட நிருபர்)



புதுவருடம் 2024 ஐ வரவேற்கும் விசேட அபிஷேக அலங்கார பூஜையானது மட்டக்களப்பு புளியந்தீவு கோட்டிப் பிள்ளையார் ஆலயத்தில் நேற்று (01) நடைபெற்றது.

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ப. துசாந்தன் சர்மாவினால் மூலஸ்தானப் பிள்ளையாருக்கு விசேட அபிஷேகம் மற்றும் அலங்கார பூஜை என்பன நடத்தப்பட்டன.

ஆலயத்திற்கென வெளியிடப்பட்ட நாட்காட்டி 2024 ஐ ஆலய பிரதம குரு மட்டக்களப்பு மாவட்ட சிறுவர் பராமரிப்பு மற்றும் நன்னடத்தை உத்தியோகத்தர் எஸ்.சந்திரகாந்தனுக்கு தலைவர் உள்ளிட்ட நிர்வாக உறுப்பினர்கள் முன்னிலையில் வழங்கி வெளியிட்டு வைத்தார்.

## மட்டக்களப்பு செயலகத்தில் பணிகளை ஆரம்பிக்கும் நிகழ்வு



புதிய காத்தான்குடி தினகரன்

மலர்ந்துள்ள 2024 ஆம் ஆண்டின் அலுவலக செயற்பாடுகளை ஆரம்பிக்கும் நிகழ்வுகள் மட்டக்களப்பு மாவட்ட செயலக வளாகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ஜே.ஜே.முரளீதரன் தலைமையில் (01) இடம் பெற்றன.

2024 ஆம் ஆண்டுக்கான பணிகளை ஆரம்பிக்கும் முதல் நாள் வைபவம் ''வலுவான எதிர் காலத்திற்கான தொடக்கவுரை'' எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் உத்தியோகத்தர்களினால் முன்னெடுக்கப்பட்டது.



தேசியக்கொடியேற்றப்பட்டு, இராணுவ வீரர்கள் உட்பட தேசத்திற்காக உயிர்த்தியாகம் செய்த அனைவரையும் நினைவு கூர்ந்து 02 நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் சர்வ மதத் தலைவர்களின் ஆசியுரையினை தொடர்ந்து மாவட்ட அரசாங்க அதிபரின் விசேட உரையும் இடம்பெற்றது.

இதன்போது அனைத்து உத்தியோகத்தர்களாலும் இவ்வாண்டிற்கான அரசசேவை உறுதியுரை மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்வானது மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.சுதர்ஷினி ஸ்ரீகாந்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்றது.

## தென்கிழக்குப் பல்கலையில் கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு



( மாளிகைக்காடு குறூப் நிருபர்)

பொது நிர்வாக மற்றும் உள்நாட்டுலுவல்கள் அமைச்சின் சுற்று நிருபத்திற்கமைய 2024 ஆம் ஆண்டின் அரச கடமைகளை ஆரம்பிக்கும் உத்தியோகபூர்வ நிகழ்வு 2024.01.01 ஆம் திகதி தென்கிழக்குப் பல்கலைக்கழக பிரதான கேட்போர் கூடத்தில், உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் அவர்களது தலைமையில் இடம்பெற்றது.

உபவேந்தரால் தேசியக் கொடி ஏற்றப்பட்டு தேசிய கீதம் இசைக்கப்பட்டதுடன் பல்கலைக்கழக பாதுகாப்பு பிரிவின் அணிவகுப்பும் இடம்பெற்றது. பின்னர் பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபரால் அரசாங்க சேவை சாத்தியப்பிரமாண உறுதிமொழி தமிழிலும் பதில் நிதியாளர் சீ.எம்.வன்னியாராச்சியால் சிங்களத்திலும் வாசிக்கப்பட்ட அதேவேளை அனைத்து உத்தியோகத்தர்களும் குறித்த உறுதிமொழியைக் கூறி கடமைகளை பொறுப்பேற்றனர். நாட்டுக்காக உயிர் நீத்த முப்படையினருக்காக இரண்டு நிமிட மௌனம் அனுஷ்ட்டிக்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

நிகழ்வின்போது பதில் நிதியாளர் சீ.எம்.வன்னியாராச்சி, நூலகர் எம்.எம்.றிபாயுடீன் பீடாதிபதிகள் பேராசிரியர்கள் என பலரும் பங்குகொண்டிருந்தனர்.

## தாழ்நிலப் பகுதிகளில் வெள்ளம்

(தோப்பூர் குறூப் நிருபர்)

தொடர்ச்சியான மழை மற்றும் மாவிலாறு வான்கதவுகள் திறக்கப்பட்டமையினால் ஈச்சிலம்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட மாவடிச்சேனை, வட்டவன் மற்றும் சேனையூர் கிராமங்களைச் சேர்ந்த தாழ்நிலப் பகுதிகளில் வசித்து வந்த பொதுமக்கள் இடம் பெயர்ந்து மாவடிச்சேனை மகா வித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். சில குடும்பங்கள் இடம்பெயர்ந்து உறவினர்கள் வீடுகளிலும் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பிரதேசத்தில் பிரசித்தி பெற்ற சின்னக்கதிர்காமம் என அழைக்கப்படும் வெருகல் ஆலயத்திற்குள்ளும் வெள்ள நீர் உட்புகுந்துள்ளதோடு திருகோணமலை மட்டக்களப்பு பிரதான வீதியும் நீரில் மூழ்கியுள்ளதால் போக்குவரத்து மேற் கொள்வதிலும் பொது மக்கள் அசௌகரியங்களை எதிர் நோக்குவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

பாதிக்கப்பட்ட பொதுமக்கள் அடிப்படை வசதியின்றி மிகவும் சிரமங்களை எதிர் நோக்குவதாகவும் தங்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுத்தருமாறும் கோரிக்கை விடுக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.





தி /மூ/ திரு இருதய வித்தியாலத்தின் ஒளி விழாவும் 5ஆம் தர புலமைப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு விழாவும் வித்தியாலயத்தில் நடைபெற்றது. இவ் விழாவில் நடிகை நயோமி கணேசா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு 5 ம் தர புலமைப்பரீட்சையில் 100ற்கு அதிகமான புள்ளிகளைப் பெற்ற மாணவ மாணவிகளுக்கு பாடசாலை உபகரணங்கள் மற்றும் புத்தகங்களை வழங்கியபோது பிடிக்கப்பட்ட படங்கள்.




# பழுதடைந்த விதை உருளைக் கிழங்கு பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு!

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

*கரவெட்டி தினகரன் நிருபர்*

சுன்னாகம் குப்பிழானில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த விதை உருளைக்கிழங்குகள் பழுதடைந்ததால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அண்மையில் வழங்கப்பட்டுள்ள விதை உருளைக்கிழங்குகள் ஒரு வகை பற்றீரியா தாக்கத்துக்கு உள்ளான நிலையில் இது குறித்த ஆய்வறிக்கையை அமைச்சரிடம் கையளிக்கப்பட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



குறித்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், விதை உருளைக்கிழங்குகள் பழுதடைந்த விவகாரம் தொடர்பில், தரகு பணம் கைமாற்றப்பட்டமைக்கான சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

மேலும், யாழ்ப்பாணத்தில் விவசாய நவீனமயமாக்கல் செயல்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்காக சுமார் 21 மெற்றிக் தொன் விதை உருளைக்கிழங்குகள் இறக்குமதி செய்யப்பட்டன.

குறித்த விடயத்தில், தவறு செய்தவர்கள் எவராக இருந்தாலும் தண்டிக்கப்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இதேநேரம் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நஷ்டஈட்டை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

# நாகர் கோவில் பகுதியில் கரையொதுங்கிய பொருள்

*யாழ்.விசேட நிருபர்*

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பகுதி கடற்கரையில் இரும்பில் அமைக்கப்பட்ட பொருளொன்று கரையொதுங்கியுள்ளது.நேற்றைய தினம் திங்கட்கிழமை காலை கரையொதுங்கிய நிலையில் அதனை பலரும் பார்வையிட்டு வருகின்றனர்.

குறித்த பொருள் வேறு பகுதிகளில் இருந்து கடலலையில் அடித்து வரப்பட்டு இருக்கலாம் என்று கருதப்படுகிறது.



# மாவட்ட மக்களின் வறுமை ஒழிப்புக்கு அர்ப்பணிப்புடன் அனைவரும் உழைப்போம்

## மாவட்ட அரச அதிபர் றூபவதி கேதீஸ்வரன்



*(பரந்தன் குறூப் நிருபர்)*

மாவட்ட மக்களின் வறுமையை ஒழிப்பதற்கும் பொருளாதார மேம்பாட்டுக்கும் ஒன்றிணைந்து உழைப்போம் என கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று (01) புதிய ஆண்டை வரவேற்று கடமைகளை பொறுப்பேற்கும் நிகழ்வும் சத்திய பிரமாண நிகழ்வும் நடைபெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.தொடர்ந்து உரையாற்றிய அவர், மக்களின் வரிப்பணத்தில் இருந்து சம்பளம் பெறும் நாங்கள் அந்த மக்களுக்கு சரியான சேவைகளை வழங்க வேண்டும்.

கடந்த ஆண்டுகளில் கொவிட் தொற்று பொருளாதார நெருக்கடியை எதிர் கொண்ட நாங்கள், இந்த ஆண்டிலேயே வறுமை ஒழித்து மக்களின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப சேவையாற்றுவார்களாக அனைவரும் அர்ப்பணிப்புடன் பணியாற்றுவோம் என தெரிவித்துள்ளார்

புதிய ஆண்டினை வரவேற்று தமது கடமைகளை ஆரம்பிக்கும் முகமாக காலை 09 மணிக்கு தேசிய கொடி ஏற்றப்பட்டு சத்திய பிரமாணத்தை தொடர்ந்து பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இதில் மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் மேலதிக அரசாங்க அதிபர் மற்றும் மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# கஞ்சா போதைப்பொருள் வைத்திருந்த மூவர் கைது

*சாவகச்சேரி விசேட நிருபர்*

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சரசாலைப் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை காலை கசிப்பு மற்றும் கஞ்சா போதைப் பொருட்களுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது சரசாலை வடக்கு பகுதியில் வைத்து மூன்று லீட்டர் கசிப்புடன் நெல்லியடிப் பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் மூன்று கிராம் கஞ்சா போதைப்பொருளை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டிலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான நபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# அமரர் சந்திரசேகரனின் 14ஆவது சிறார்த்த தின நிகழ்வு



*நுவரெலியா தினகரன் நிருபர்*

மலையக மக்கள் முன்னணியின் முன்னாள் தலைவர் அமரர் சந்திரசேகரனின் 14 வது சிறார்த்த தின நிகழ்வு நேற்று (01) திங்கட்கிழமை ஹட்டன் மலையக மக்கள் முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது கட்சியின் செயலாளர் நாயகமும் பேராசிரியருமான விஜயசந்திரன், உப தலைவரும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான ஆர். ராஜாராம், மலையக தொழிலாளர் முன்னணியின் நிதிச் செயலாளர் தாழமுத்து சுதாகரன், தேசிய அமைப்பாளர் முரளி, மலையக தொழிலாளர் முன்னணியின் பிரதி செயலாளர் விஸ்வநாதன் புஸ்பா உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

# அரசாங்கத்தின் 'அஸ்வெசும' திட்டம் வரவேற்கத்தக்கது

*(மாத்தளை சுழற்சி நிருபர்)*

நாட்டின் பொருளாதார நிலைமை வீழ்ச்சியடைந்து காணப்பட்டபோதும் அரசாங்கம் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் அஸ்வெசும நலன்புரி திட்டத்தை அமுல்படுத்தி நாடளாவிய ரீதியில் அதனை விரிவுபடுத்தி செயல்படுத்தியுள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும் என முன்னாள் இரத்தோட்ட பிரதேச சபை உறுப்பினர் எரோசன் சுகுமாரன் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்; தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். இந்நிலையில் அரசாங்கம் அஸ்வெசும நலன்புரி திட்டம் மூலம் வசதி குறைந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக தொடர்ச்சியான நிவாரணத் திட்டங்களை வழங்கி வருகின்றது.

அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு வரும் இவ்வாறான நிவாரணத் திட்டங்கள் யாவும் மலையக மக்கள் யாவருக்கும் முழுமையாக சென்றடைய வேண்டும். மலர்ந்துள்ள 2024 புத்தாண்டில் அனைத்து மக்களின் துயரங்கள் நீங்கி நாடு சுபீட்சமாக அமைய பிரார்த்திக்கிறேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.


**நம்பிக்கைப் பொறுப்பாளர்களுக்கான அறிவித்தல்**

**பதிவாளர் நாயகம் திணைக்களம்.**

வெளிப்படையான நம்பிக்கைப் பொறுப்புக்கள் தொடர்பாக நம்பிக்கைப் பொறுப்பாளர்களினால் பராமரிக்க வேண்டிய தகவல்கள்

2018 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க நம்பிக்கைப் பொறுப்புக்கள் (திருத்தச்) சட்டம் மற்றும் 2019 ஆம் ஆண்டு சனவரி 28 ஆம் திகதிய இலக்கம் 2108/10 கொண்ட அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2019 ஆம் நம்பிக்கைப் பொறுப்பு கட்டளைகளுக்கு (வெளிப்படையான நம்பிக்கைப் பொறுப்புகளுக்கான தகவல்கள்) அடிப்படையில் நம்பிக்கைப் பொறுப்பொன்றினை உருவாக்கும் போது நம்பிக்கை பொறுப்பாளர்களால் கீழ் குறிப்பிட்டுள்ள தகவல்களை பெற்றுக்கொள்ளல் மற்றும் பராமரித்துச் செல்லல் வேண்டும்.

1) **நம்பிக்கைப் பொறுப்பிற்கான விபரங்கள்**
   - நம்பிக்கைப் பொறுப்பின் பெயர்
   - நம்பிக்கைப் பொறுப்பின் முகவரி
   - நம்பிக்கைப் பொறுப்பின் நோக்கம்
   - நம்பிக்கைப் பொறுப்பு உள்ளடக்கப்படும் மாவட்டம் மற்றும் காணிப்பதிவகம்.
2) **நம்பிக்கைப் பொறுப்பின் ஸ்தாபகர், நம்பிக்கை பொறுப்பாளர்கள், சக பொறுப்பாளர்கள் தொடர்பான விபரங்கள்.**
   - பெயர் முகவரி
   - தேசிய அடையாள அட்டை இலக்கம்
3) **பயன்பெறுனர், பயன்பெறுனர்கள், பயன்பெறுனர்களின் வகுப்பு**
   - பெயர்
   - முகவரி
   - தேசிய அடையாள அட்டை இலக்கம்
4) மேலே 2 அல்லது 3இல் குறிப்பிடப்படாத ஆனாலும் நம்பிக்கைப் பொறுப்பொன்றினை உருவாக்குவதற்கு பங்களிப்பு வழங்கும் ஏனைய நபர்கள் (உப அங்கத்தவர்கள், சட்ட அங்கத்தவர்கள், முகாமையாளர்கள், முதலீட்டு ஆலோசகர்கள், வரி ஆலோசகர்கள், கணக்காளர்கள்)
5) சட்ட நபரொருவரின் பொருள் நயத்திற்காக நம்பிக்கைப் பொறுப்பொன்றினை உருவாக்கியிருக்கும் பட்சத்தில் அப்பொறுப்பின் பொருள்நய உரிமையாளர்களான இயற்கை நபர்கள்.
6) உரிய நம்பிக்கைப் பொறுப்பின், நம்பிக்கை பொறுப்பாளர்கள் அத்தகவல்களை மூன்று மாதங்களுக்கொருமுறை இயலுமானவரை சரிபார்த்து இற்றைப்படுத்தல் வேண்டும்.
7) ஏதேனும் அசையும் அல்லது அசையா சொத்து தொடர்பாக வெளிப்படையான நம்பிக்கைப் பொறுப்பின், நம்பிக்கைப் பொறுப்பாளரால் மேலே குறிப்பிட்ட அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட III ஆவது அட்டவணையில் குறிப்பாக குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் பதிவு செய்வதற்காக பொறுப்பாவணத்தின் மூலப்பிரதியுடன் காணிப்பதிவாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

பதிவாளர் நாயகம்

**மேலதிக தகவல்களுக்காக விசாரிக்கவும்**
**உதவி பதிவாளர் நாயகம் (நொத்தாரிசு பிரிவு)**
**பதிவாளர் நாயகம் திணைக்களம்**
**இலக்கம் 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல தொலைபேசி இலக்கம் - 0112889024/0112889496**



**இலங்கை போக்குவரத்துச் சபை (SLTB)**

250 எண்ணிக்கையான புதிய விரல்ரேகை பதிவு மற்றும் முக அடையாள வருகை நேரப்பதிவு இயந்திரங்கள் மற்றும் மத்தியமயப்படுத்தப்பட்ட வருகை நேரப்பதிவு மென்பொருளை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் பராமரித்தலுக்கான விலைக்கோரல்

**SLTB/TS/GEN/52/2023**

1. 2024-01-03ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முடிவுறுத்தல் / திறக்கப்படுவதற்காக திட்டமிட்டிருந்த மேற்கூறிய விலைமனு 2024-01-10ஆம் திகதி மு.ப. 10.30 மணி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை தயவு செய்து கவனத்திற் கொள்ளவும்.
2. வளமுள்ள சகல விலைமனுதாரர்களின் நலன்கருதி, மேற்கூறிய பெறுகைக்கான விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-01-03ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு கொழும்பு-05, இல. 200, கிருல வீதி, இபோச பயிற்சிப் பிரிவு, கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

**தலைவர்,**
**இபோச பெறுகைக் குழு,**
**இலங்கை போக்குவரத்துச் சபை,**
**இல. 200, கிருல வீதி,**
**கொழும்பு-05.**

**விசாரணைகள்:** **செயலாளர், பெறுகைக் குழு,**
**தொலைபேசி : 7706010, 0771056110,**
**தொலைபேசி/தொலைநகல் : 0112588457**



துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு

**வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம்**

**பதவி வெற்றிடங்கள்**

பின்வரும் பதவிகளுக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பிரசாவுரிமையினைக் கொண்டுள்ள அத்துடன் உரிய தகைமைகளையும் அனுபவத்தையும் கொண்டுள்ள பொருத்தமான பரீட்சார்த்திகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

| பதவி | ஊழியர் வகுதி | வெற்றிடமாகவுள்ள பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| பொது முகாமையாளரின் செயலாளர் | JM 1-2 | 01 |
| இணை உத்தியோகத்தர் | MA 3 | 03 |
| முகாமைத்துவ உதவியாளர் | MA 1-2 | 16 |
| முகாமைத்துவ உதவியாளர் (கலத்துறை மேடை) | MA 1-2 | 01 |
| சாரதி | PL 3 | 01 |

எனும் இணையத்தளத்தினை பார்வையிடுவதன் மூலம் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். **http://www.cscl.lk**

இவ்விளம்பரம் செய்யப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தின் (CSCL இன்) தவிசாளருக்கு பதிவுத்தபால் மூலம் விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

**தவிசாளர்,**
**வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்,**
**இல : 27, MICH கட்டடம், சேர் ராஷிக் பரீட் மாவத்தை (பிறிஸ்ரல் வீதி), கொழும்பு 01.**
**மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்க. - 011 249 7800, விரிவு 258/251**
**திகதி: 02.01.2024**



**இலங்கை வங்கி**

**ஏலவிலை கூறலுக்கான அழைப்பு**

**இலங்கை வங்கியின் வெலிமடைக் கிளை மற்றும் முகாமையாளர் விடுதியினைப் புனரமைத்தல்**

**கேள்விப்பத்திர இல: BOC/PROP/P/2023/279**

1. கீழே விபரிக்கப்பட்டவாறும், சுமார் ரூபா 88 மில்லியன் (பெறுமதி சேர் வரி நீங்கலாக) மதிப்பிடப்பட்ட செலவிலும், இலங்கை வங்கியின் வெலிமடைக் கிளை மற்றும் முகாமையாளரின் விடுதியினைப் புனரமைப்பதற்கு தகுதியுடைய மற்றும் தகைமை பெற்ற விலை கூறுவோரிடமிருந்து முத்திரையிடப்பட்ட ஏலவிலை கூறல்கள் இத்தால் கோரப்படுகின்றன.

   கட்டடத்தின் புதிய கூரையினை நிர்மாணித்தல், முகத்தோற்றத்தினைச் சீரமைத்தல், உள்ளகப் பொருத்தப்பணிகள், MEP சேவைகளைத் தரமுயர்த்தல் மற்றும் நிலத்தோற்றம் அமைத்தல் அத்துடன் வாகனத் தரிப்பிடம் போன்றவற்றுடன் கூடிய வெளியிடப் பிரதேசங்களைத் தரமுயர்த்துதல் என்பவற்றை உள்ளடக்கிய சுமார் 812 சதுர மீற்றர் தரைப் பரப்பளவுடன்கூடிய மூன்று மாடிக் கட்டடத்தைப் புனரமைப்பதனை இக்கருத்திட்டம் கொண்டுள்ளது.

   வங்கிச் செயற்பாடுகள் தொடர்ந்து நடைபெறும் ஆகையால், பணிகள் கட்டங்கட்டமாக மேற்கொள்ளப்படும். பணிகள் கட்டம் கட்டமாக நிறைவு செய்து கையளிக்கப்படல் வேண்டும்.

   இடத்தின் அமைவிடம் இல.12 12/A, ஹேமபால முனிதாச மாவத்தை, வெலிமடை

   நிர்மாணக் காலப்பகுதி 308 நாட்கள்.
2. தேசிய போட்டி ஏலவிலைகூறல் நடைமுறை ஊடாக ஏலவிலை கூறல் நடத்தப்படும்.
3. ஒப்பந்தத்தை வழங்கத் தகைமை பெறுவதற்கு, வெற்றிகரமான ஏலவிலை கூறுவோர் புறக்கணிக்கப்பட்ட பட்டியலில் இடம்பெற்றிருத்தலாகாது என்பதுடன், பின்வரும் தேவைப்பாடுகளை நிறைவு செய்திருக்க வேண்டும்.
   a. கட்டட நிர்மாணத் துறையில் தரம் C4 அல்லது அதற்கு மேல் நிர்மாணக் கைத்தொழில் அதிகார சபையில் (CIDA) பதிவு செய்யப்பட்டிருத்தல்.
4. ஒப்பந்தத்தை வழங்கத் தகைமை பெறுவதற்கான தகைமைத் தேவைப்பாடுகள் வருமாறு:
   a. கடந்த 6 ஆண்டுகளில் செய்து முடிக்கப்பட்ட நிர்மாணப் பணிகளின் சராசரி வருடாந்த புரள்வு குறைந்தது ரூபா 150 மில்லியனாக இருக்க வேண்டும்.
   b. மூன்று மாடிகளைக் கொண்ட அல்லது அதற்கும் மேற்பட்ட அதனையொத்த தன்மையிலான மற்றும் சிக்கல் வாய்ந்ததும், குறைந்தது ரூபா 70 மில்லியன் பெறுமதியிலானதுமான வர்த்தகக் கட்டடத்தை 10 மாதங்களில் புதுப்பித்த அல்லது கடந்த 6 ஆண்டு காலப்பகுதியில் அதற்கு அதிகமான செலவிலான கருத்திட்டத்தை அதற்குரிய காலப்பகுதியில் புதுப்பித்து வழங்கிய அனுபவம்.
   c. திரவச் சொத்துக்கள் அத்துடன்/அல்லது கொடுகடன் வசதிகளில் குறைந்தபட்ச தொகை (வேறு ஒப்பந்தக் கடமைப் பொறுப்புகளுக்கு ஒதுக்கிய பின்னர்) மற்றும் இவ் ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்படக்கூடிய ஏதேனும் முற்பணக் கொடுப்பனவுகள் நீங்கலாக, ரூபா 25 மில்லியனுக்குக் குறையாதிருத்தல்.
5. ஆர்வமுடைய விலை கூறுவோர் மேலதிகத் தகவல்களையும், தெளிவுபடுத்தல்களையும் கீழே குறிப்பிடப்பட்டவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன், விலை கூறலுக்கான ஆவணங்களை கீழே குறிப்பிடப்பட்ட முகவரியில் 2024.01.02 தொடக்கம் 2024.01.29 வரை வேலை நாட்களில் 0900 மணியிலிருந்து 1430 மணி வரை இலவசமாகப் பார்வையிடலாம்.
6. ஆங்கில மொழியிலான விலைகூறல் ஆவணங்களின் முழுமையான தொகுதியினை ரூபா 18,000.00 (வரிகள் உள்ளடங்கலாக) மீளளிக்க முடியாத கட்டணத்தைச் செலுத்தியும், 2024.01.02 இருந்து 2024.01.29 வரை வேலை நாட்களில் 0900 மணியிலிருந்து 1430 மணி வரை கீழே குறிப்பிட்டவர்களுக்கான எழுத்திலான விண்ணப்பத்தினை சமர்ப்பித்தும் கொள்வனவு செய்யலாம். மீளளிக்க முடியாத கட்டணக் கொடுப்பனவு கீழே குறிப்பிடப்பட்டவர் மூலம் அதிகாரமளிக்கப்பட்ட பண வைப்பின் வடிவில் அமைந்திருக்கும்.
7. இரு பிரதிகளிலான முத்திரையிடப்பட்ட ஏல விலை கூறல்கள் 2024.01.30 அன்று 1000 மணிக்கு அல்லது அதற்கு முன்னர், கொழும்பு 1, இலங்கை வங்கி மாவத்தை, 'இலங்கை வங்கி சதுக்கம்', இல. 01, இலங்கை வங்கி, 14 ஆம் மாடியில் உள்ள விலை கூறல் பெட்டியில் இடப்பட வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலை கூறல்கள் திறக்கப்படாது திருப்பி அளிக்கப்படும். ஏல விலை கூறல்கள் மூடப்பட்டதன் பின்னர் உடனடியாக ஏல விலை கூறலில் சமூகமளித்துள்ள ஏல விலை கூறுபவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
8. ஏல விலை கூறல்கள், விலை கூறல் முடிவுத் திகதியில் இருந்து 91 நாட்களுக்கு செல்லுபடியானதாக இருக்க வேண்டும்.
9. அனைத்து ஏல விலை கூறல்களும் நியம படிவங்களின் (ஏல விலை கூறல்) 9ஆம் பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ள விலைகூறல் முறி படிவத்தைப் பயன்படுத்தி, இலங்கை வங்கி தவிர்ந்த உரிமம் பெற்ற வர்த்தக வங்கி ஒன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 2024.05.28 வரை செல்லுபடியான ரூபா 1,320,000.00 (ரூபா ஒரு மில்லியன் முன்னூற்று இருபதாயிரம்) கொண்ட வங்கி உத்தரவாதத்தின் வடிவில் விலைகூறல் பிணையுடன் அல்லது அதே தொகைக்கான பண வைப்புச் சீட்டு / வங்கி வரைபுடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.
10. 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பகிரங்க ஒப்பந்தச் சட்டத்தில் அல்லது ஏதேனும் அதன் திருத்தத்தில் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாட்டின் பிரகாரம் PCA3 படிவம் ஏல விலை கூறலுடன் இணைக்கப்பட வேண்டும்.
11. விலை கூறலுக்கு முன்கூட்டிய கூட்டம் 2024.01.10 அன்று 1100 மணிக்கு வேலைத்தளத்தில் இடம்பெறும்.

**பிரதான முகாமையாளர்**
சொத்துகளும் சேகரிப்பும் பகுதி
14ஆம் தளம், இலங்கை வங்கி
"BOC சதுக்கம்" இல.01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.
தொலைபேசி: 094 112204260, 094 112544310, 094 11 2434786
மின்னஞ்சல்: properties@boc.lk

1975 BOC www.boc.lk
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் – கேகாலை**

**வைத்தியசாலைகளில் அழுக்குத் துணிகளை சலவை செய்வதற்காக விலைமனு கோரல் – 2024ஆம் வருடம்**

கேகாலை பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவினுள் அமைந்துள்ள வைத்தியசாலைகளில் அழுக்குத் துணிகளை சலவை செய்வதற்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து 2024-01-26ஆம் திகதி மு.ப. 10.30 மணி வரை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. 2024-01-02ஆம் திகதி முதல் 2024-01-24ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையான காலத்தில் 500.00 ரூபாவைச் செலுத்தி விலைக்கோரல் மாதிரி படிவம் மற்றும் விலைமனுக்களைச் சமர்ப்பிக்க வேண்டிய வைத்தியசாலைகள் தொடர்பான விபரங்களை இந்த அலுவலகத்தின் கணக்கிடல் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

03. இது தொடர்பான மேலதிக விபரங்களை இந்த அலுவலகத்தின் www.rdhskegalle.lk எனும் இணைய தளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,**
**கேகாலை.**
**தொ.பே. இல. 035-2222549**

## சிறு விளம்பரம்



### மோட்டார் வாகனங்கள்

108

### நிஸான் கார் விற்பனைக்கு

KD-8870 Nissan AK12, 2003, CAR - அதியுயர் விலைக்கு வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி . இ ல . 310, கா லி வீதி , கொழும்பு 0 3. தொ லைபே சி 0 71 4542958
085398




119

### பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

NA-4724 TOYOTA COASTER, 2002, BUS அதியுயர் விலைக்கு. வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி, இல. 31 0, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 07 1 4 542 9 58.
085397

PY-5 8 1 5 DFSK Mini truc k 2013, அதி யுய ர் விலைக்கு. வெ லிபெல் பினான்ஸ் பிஎல்சி. இல. 310, கா லி வீதி, கொ ழும்பு 03. தெ ாலைபேசி 071454 2958
085401



122

### மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

BCF-2556 HERO HUNK, 2015 MOTOR CY CLE, அதியுயர் விலைக்கு வெலிபெ ல் பினான்ஸ் பிஎ ல்சி. இல. 310, கா லி வீதி, கொ ழும்பு 03. தொலைபேசி 0711210 8 10.
085399

YM -0650 TVS King, 20 10 THREE WH EELER, அதி யு யர் வி லைக்கு. வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபே சி 0705999 1 63.
085402

YT-6950, BAJAJ 2011, YT-4717, BAJAJ 2011, AB N - 7363, BAJAJ 201 6 THREE WHEELE R அதி யுயர் வி லைக்கு. வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி. இல. 310, கா லி வீதி, கொ ழும்பு 03. தொலைபேசி 0711210 8 10
085400

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil your Future Dreams

## அறிவித்தல்

2007 ஆண்டின் 07ஆம் இலக்க நிறுவனச் சட்டத்தின் 9(2)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் நிறுவனத்தின் பெயர் மாற்றப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| அ) | நிறுவனத்தின் முன்னைய பெயர் | : ஆர் சீ எம் - மெடிகேன் களம்பு (பீவீடீ) எல்டீடி |
| ஆ) | நிறுவன பதிவிலக்கம் | : PV 112612 |
| இ) | நிறுவனத்தின் பதிவு இலக்கம் | : இல. 55 1/1, முதலாம் மாடி, தெமசு சென்டர், குமரன் ரத்னம் வீதி, கொழும்பு-02. |
| ஈ) | நிறுவனத்தின் புதிய பெயர் | : கெயார்கிளவுட் களம்பு (பீவீடீ) எல்டீடி |

## வெற்றிடங்கள்

**நீர்ப்பாசன அமைச்சுக்கு**

### திட்டப் பணியாளரின் ஆட்சேர்ப்பு

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான பன்முகப்பட்ட நிகழ்ச்சி நிரல் அணுகுமுறையின் (CResMPA) உலக வங்கி நிதியளிக்கப்பட்ட திட்டத்திற்காக முகாமைத்துவ சேவை திணைக்கள (MSD) 01/2019 ஆம் இலக்க சுற்றுநிருபம் மற்றும் அரச ஆட்சேர்ப்பு நடைமுறைகளின்படி மற்றும் சேவையை பெறும் அடிப்படையில் இந்த அமைச்சின் அவசரமான மற்றும் அவசியமான பெறுகைத் தேவைகள் அதேபோன்று இந்த அமைச்சின் கீழான மற்ற திட்டங்களுக்காக பணியாற்றுவதற்கு தேவையான பின்வரும் பதவிக்கு "ஒப்பந்த அடிப்படையில்" திட்ட முகாமைத்துவ பணியாளரை பணியமர்த்துவதற்கு தகுதியுடைய விடாமுயற்சி மற்றும் அர்ப்பணிப்புக் கொண்ட இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்குறிப்பிடப்பட்ட 01/2019 ஆம் இலக்க MSD சுற்றுநிருபத்தின் அட்டவணை 03 இன் 03ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட சம்பள நிலைகளைக் கொண்டிருக்கும்.

விண்ணப்பதாரர்கள் 64 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

ஆங்கில மொழியில் நிபுணத்துவம் அதேபோன்று அரச ஒழுங்குமுறைகளுடனான பரிட்சயம் மற்றும் கணினி அறிவு கட்டாய முன் தேவைகளாகும். சர்வதேச ஆலோசனை சேவைகள், பிரதான நிர்மாண சிவில் வேலைகள், மற்றும் இலங்கையில் வெளிநாட்டு நிதித் திட்டங்களின் கீழான நவீன உபகரணங்கள் மற்றும் மிக நுட்பமான கருவிகளின் பெறுகை மற்றும் ஒப்பந்த முகாமைத்துவத்தில் வேலை அனுபவம். உலக வங்கி நிதி அளிக்கப்பட்ட திட்டங்களில் தொடர்புடைய அனுபவத்தை பெற்றிருப்பது மேலதிக அனுகூலமாக அமையும்.

| இல. | PS பிரிவு | பதவிப் பெயர் | பதவியின் எண்ணிக்கை | பொருத்தமான சுற்றுநிருபம் |
|---|---|---|---|---|
| 01 | PS 3 | பெறுகை மற்றும் ஒப்பந்த முகாமைத்துவ நிபுணர் | 01 | 01/2019 ஆம் இலக்க MSD சுற்றுநிருபம் |

மேலதிக விபரங்களுக்கு, www.irrigationmin.gov.lk என்ற இணையதளத்திற்கு பிரவேசிப்பதோடு மேற்குறிப்பிடப்பட்ட சுற்றுநிருபங்களை பார்க்க நிதி அமைச்சின் இணையதளத்திற்கு பிரவேசிக்கவும்.

விண்ணப்பங்களை கீழ் தரப்பட்டுள்ள முகவரிக்கு கிடைப்பதற்கு 2024 ஜனவரி 18ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும் என்பதோடு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும்.

திட்டப் பணிப்பாளர்

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான பன்முகப்பட்ட நிகழ்ச்சி நிரல் அணுகுமுறை (CResMPA)

இல. 11, ஜாவத்த வீதி, கொழும்பு 05,

குறுகிய பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரர்கள் நேர்முகப்பரீட்சை ஒன்றுக்கு அழைக்கப்படுவர். எந்த வடிவத்திலான ஆதரவு திரட்டல்களும் தகுதி இழப்பாக அமைவதோடு அவ்வாறான விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**செயலாளர்,**
**நீர்ப்பாசன அமைச்சு**
**திகதி: 2024.01.02**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் – அனுராதபுரம்**

### அரச வைத்தியசாலைகளுக்கு அழுக்குத் துணிகளைச் சலவை செய்தல் - 2024

அனுராதபுரம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் பெறுகைக் குழுத் தலைவராகிய என்னால் 2024ஆம் வருடத்தில் பின்வரும் வைத்தியசாலைகளில் அழுக்குத் துணிகளைச் சலவை செய்யும் சேவையை தொடர்ச்சியாக நடாத்திக் கொண்டு செல்வதற்காக ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

01. இது தொடர்பில் ஆர்வம் காட்டும் தரப்பினர் ஒரு வைத்தியசாலை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கைக்கு அனுராதபுரம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் சிறாப்பருக்கு மீளளிக்கப்படாத ஒவ்வொரு வைத்தியசாலைக்கும் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை ஆவணக் கட்டணமாகச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் எழுத்துமூலமான வேண்டுகோள் ஒன்றுடன் தேசிய அடையாள அட்டையின் பிரதியொன்றையும் சமர்ப்பித்து 2024-01-03ஆம் திகதி முதல் 2024-01-03ஆம் திகதி வரையான பொதுவான கடமை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.00 வரையான காலத்தில் அனுராதபுரம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கணக்கிடல் பிரிவில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**அனுராதபுரம் மாவட்டத்திற்குரித்தான போதனா வைத்தியசாலைகள் தவிர்ந்த ஏனைய சகல வைத்தியசாலைகளுக்கு அழுக்குத் துணிகளைச் சலவை செய்தல்**

| சேவை | வைத்தியசாலை வகுதி | கட்டணம் மற்றும் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் | | |
|---|---|---|---|---|
| | | ஒரு கேள்விப் பத்திரத்திற்கான மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் (ரூபா) | வங்கிப் பிணை முறி (ரூபா) | 170 பொதுப் படிவத்திற் கமைய சொத்துச் சான்றிதழ் (ரூபா) |
| அழுக்குத் துணிகளை சலவை செய்தல் | BH- A | 3,000.00 | 32,000.00 | |
| | BH- B | 3,000.00 | 32,000.00 | |
| | BH- C | 3,000.00 | 32,000.00 | |
| | DH- A | 3,000.00 | 12,000.00 | |
| | DH- B | 3,000.00 | 12,000.00 | |
| | DH- C | 3,000.00 | 12,000.00 | |

02. ஒன்றுக்கு மேற்பட்ட வைத்தியசாலைகளுக்கு விலைமனுக்களைச் சமர்ப்பிக்க எதிர்பார்ப்பதானால் அதன்பொருட்டு வெவ்வேறான விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும் என்பதுடன் வெவ்வேறான வகையில் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. பொது 170 படிவம் மூலம் சொத்துச் சான்றிதழை சமர்ப்பிக்காவிடின் அதற்குச் சமமான பெறுமதியுடைய பணத்தை பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தில் வைப்புச் செய்தல் வேண்டும்.

04. இந்த ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கு பின்வரும் அடிப்படை தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

  I. வழங்கல்களுக்கான உரிய பிணை மற்றும் சொத்துச் சான்றிதழ் சமர்ப்பித்தல் வேண்டும்.

  II. அனுராதபுரம் மாவட்டத்தினுள் சலவை செய்யும் மற்றும் துணி உலர்த்தும் இடமொன்று உள்ளதென்பதை அந்த இடம் அமைந்துள்ள பிரதேசத்திற்குப் பொறுப்பான பொது சுகாதார பரீட்சகரிடமிருந்து பெற்றுக்கொண்ட சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

  III. சலவை செய்யும் இடம் மற்றும் உலர்த்தும் இடத்திற்குரித்தான பிரதேசத்திற்குப் பொறுப்பான சுகாதார வைத்திய அதிகாரியினால் வழங்கப்பட்ட (துணி சலவை செய்யும் மற்றும் உலர்த்தும் இடம் தொடர்பில்) தகுதிச் சான்றிதழ்

  IV. முன்னைய சேவை அனுபவம் தொடர்பில் அண்மைய 03 வருடங்களுக்குச் சமமான அல்லது அதற்கு மேற்பட்ட அனுபவத்தை உள்ளடக்கிய சான்றிதழ் (அரச நிறுவனமொன்றில் / அரச சார்பு நிறுவனமொன்றில் பெற்றுக்கொண்ட அனுபவச் சான்றிதழ்)

  V. விண்ணப்பிக்கும் வைத்தியசாலையில் துணித் துண்டுகளின் கொள்ளளவு அல்லது அதற்கு மேற்பட்ட கொள்ளளவுடைய துணித்துண்டு அளவுகளை சலவை செய்துள்ளமைக்காக மேற்படி V பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அனுபவம் சான்றிதழில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

  VI. மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் வழங்கப்பட்ட சுற்றாடல் அனுமதிப்பத்திரம்.

05. முழுமையற்ற விண்ணப்பப் படிவம் மற்றும் சமர்ப்பிக்க வேண்டிய I முதல் VI வரையான சகல ஆவணச் சாட்சிகள் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்படாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் குறித்த ஆவணங்கள் பின்னர் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

06. கேள்வி ஆவணங்களை மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியாக தயாரித்து இரு உறைகளில் இட்டு அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் ''...................... வைத்தியசாலைக்கு 2024-01-31ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு திறப்பதற்குள்ள 2024ஆம் வருடத்தில் அழுக்குத் துணிகளைக் கழுவுவதற்கான பெறுகை'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

07. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை 2024-01-31ஆம் திகதி மு.ப. 11.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர்/ அனுராதபுரம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பிராந்திய பெறுகைக் குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், அனுராதபுரம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது அம்முகவரியில் அமைந்துள்ள கணக்கிடல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

08. 2024-01-31ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து அவ்விடத்திலேயே கேள்விப் படிவங்கள் திறக்கப்படும் என்பதுடன் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் இதில் கலந்துகொள்வதற்கு அனுமதி வழங்கப்படும்.

09. அரச ஒப்பந்தங்களை மீறி அபகீர்த்தியாளர் பட்டியல்படுத்தப்பட்டுள்ள நபர்கள் இந்த பெறுகைக்கு முன்வர முடியாது.

10. சமர்ப்பிக்கப்படும் கேள்வியை முழுமையாக அல்லது ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பெறுகைக்குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**என்.பீ.டி. ஆரியரத்ன,**
**தலைவர்,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் / பிராந்திய பெறுகைக் குழு.**
**அனுராதபுரம்.**

## பெறுகை அறிவித்தல்

### கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை - ராகம

2024ஆம் வருடத்தின் பொருட்டு பின்வரும் சேவைகளுக்காக அனுபவம் மற்றும் தகைமை வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைக் குழுவின் தவிசாளரினால் கேள்விப் படிவங்கள் கோரப்படுகின்றன.

| | ஒப்பந்தத்தின் பெயர் | தகைமைகள் | விலைமனு பிணைத் தொகை ரூபா | விலைமனு ஆவணக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|
| 01 | சாக்கடை முறைமையைப் பராமரித்தல் (கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை - ராகம) | i. நிர்மாண அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் (ICTAD) நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு வேலைகளை நிறைவேற்றும் தகைமையாக தரம் C 8 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரராக இருத்தல் வேண்டும். மற்றும் ii. சாக்கடை முறைமையை பராமரித்தல் தொடர்பில் அனுபவம் வாய்ந்தவராய் இருத்தல் வேண்டும் மற்றும் குறைந்தபட்சம் கடந்த 05 வருட காலத்தினுள் 03 வருட காலம் சாக்கடை முறைமையைப் பராமரித்திருத்தல் வேண்டும் | 10,000.00 | 2,000.00 |
| 02 | உரிமை கோரப்படாத சடலங்கள், இறந்து பிறந்தவைகள், உடற் பாகங்கள், மாதிரி திசுக்கள் மற்றும் தொப்புற்கொடி பாகங்களை அகற்றுதல் மற்றும் புதைத்தல் | மரணச் சடங்கு சேவைகள் தொடர்பில் அனுபவத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும். | 5,000.00 | 1,000.00 |
| 03 | சிற்றுண்டிச்சாலையை நடாத்திக் கொண்டு செல்லுதல் - வாத நோய் மற்றும் புனருத்தாபன வைத்தியசாலை - ராகம | சிற்றுண்டிச்சாலையை நடாத்திக் கொண்டு செல்லுதல் தொடர்பில் குறைந்தபட்சம் 03 வருடகால அனுபவம் இருத்தல் வேண்டும். | 5000.00 | 1,000.00 |
| 04 | சிற்றுண்டிச்சாலையை நடாத்திக் கொண்டு செல்லுதல் - மாவட்ட வைத்தியசாலை - கந்தானை | | 5000.00 | 1,000.00 |

02. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் மூலம் இந்த ஒப்பந்தக்காரர்கள் நியமிக்கப்படுவர்.

03. இதன்பொருட்டு ஆர்வம் கொள்ளும் எந்தவொரு கேள்விதாரர், முகவரொருவர் அல்லது பெயர் குறிப்பிடப்பட்ட ஒருவர் பின்வருவனவற்றைச் சமர்ப்பித்து 2024.01.02ஆம் திகதி முதல் 2024-01-22ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் நிதிப் பிரிவிலிருந்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
   - கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு எழுத்துமூல விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்தல்
   - வியாபாரப் பெயர்ப் பதிவுச் சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றைச் சமர்ப்பித்தல்.

04. 2024-01-23ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை பிராந்திய பெறுகைக் குழுவின் தவிசாளருக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது வடகொழும்பு போதனா வைத்தியசாலையின் பிரதான கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு கிடைக்கச் செய்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் விண்ணப்பதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

05. சகல கேள்விகளும் இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' எனக் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறித்த பெறுகையின் பெயர் மற்றும் திறக்கப்படும் திகதியை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். (தொலைபேசி இல. 011-2959261/2 நீடிப்பு 722)

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை,**
**ராகம.**

The Housewives' companion
Classifieds on
Daily News

## மலையக கலை கலாசார சங்க ஏற்பாட்டில்

# சான்றோர் கௌரவிப்பும் இந்திய திரை உலக முன்னணி நடிகர்கள் கௌரவிப்பும்



மலையக கலை, கலாசார ( இரத் தினதீபம்) சங்கத் தின் ஏற்பாட்டில் சான்றோர் கௌர விப்பும் இந்திய திரை உலக முன்னணி நடிகர்க ளின் ஞாபகார்த்த நிகழ்வும் திரைப் பட நடிகர் இரா ஜேஸ்குமார், திலீப் குமார் (தயாரிப்பாளர், இயக்குனர்) மற்றும் திரைப் பட நடிகை திலகம் சாவித்திரி ஆகியோர்களுக்கு நினைவஞ்சலி செலுத் தும் நிகழ்வும் மற்றும் சான்றோர்கள் கௌரவிப்பு நிகழ்வும் கண்டி கெப்பிடி பொல ஞாபகார்த்த மண்டபத்தில் சங்கத் தின் தலைவர் எஸ். பரமேஸ்வரன் தலை மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பேராதனை பல்கலைக்கழக தமிழ் துறை பேராசிரியர் துரைமனோகரன் கலந்து சிறப்பித்தார். சிறப்பு விருந்தினராக சந் திரவதனா ரட்ணராஜா குருக்கள், கலாபூச ணம் இஸ்மாலிஹா தாவூத், சமூகப் பணி யாளர் பாத்திமா சில்மியா சஹாப்தீன் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

மாத்தளை விபுலானந்தா கலை மன் றத்தின் தலைவர் மாத்தளை மாரிய முத்து கோயிலின் உப செயலாளர் ஏ. யோகராஜா செட்டியார், கவிதாயிணி ஷிபானியா பௌசுல், கண்டி தமிழ் சங்கத் தின் முக்கியஸ்தர் எஸ். பாலசிங்கம், ஊட கவியலாளர்களான சுதாரகன் கண்டி தமிழ் சங்கத்தின் உறுப்பினர் எஸ். பாலசிங்கம் உள்ளிட்ட பலர் கௌரவிக்கப்பட்டனர்.

இதன்போது மலையக கலை கலாசார சங்கத்தினால் பன்விலை சிவணேஸ் வரா தமிழ் வித்தியாலயத்திற்கு அதன் அதிபர் எம். நவநீதன் பாடசாலைக்கு ஒலிபெருக்கி உபகரணங்களை வழங்கி வைத்தார்.

மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் தலைவர் கலாபூசணம் இரா. அ. இராமன் மற்றும் மாத்தளை சுதாகரன் ஆகியோர்க ளினால் மலையக கலை கலாசார ( இரத் தினதீபம்) சங்கத்தின் ஸ்தாபகத் தலைவர் ராஜா ஜெகின்ஸின் 40 வருட சேவையைப் பாராட்டி விருது வழங்கி கௌரவிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தி திரையுலக நடிகையர் திலகம் மற்றும் இந்தி நடிகர் திலிப்குமார் பற்றி மலையக கலை கலாசார சங்கத்தின் தலைவர் எஸ். பரமேஸ்வரன் கருத்துக்க ளைப் பகிர்ந்துகொண்டார்.

சாவித்திரி கணேஸ் (Savithri Ganesh) தெலுங்கு, 1936 டிசம்பர் 26, 1981), புகழ் பெற்ற ஒரு தென்னிந்தியத் திரைப்பட நடிகை, திரைப் பட இயக்குனர், தயாரிப் பாளர் ஆவார். இவர் தமிழ், தெலுங்கு, கன் னடம், இந்தி மொழிக ளில் 318 படங்களில் நடித்திருக்கிறார்.

**வாழ்க்கைச் சுருக்கம்**

சாவித்திரி ஆந்திரப் பிரதேசத்தில் குண்டூரில் சிறாவூர் என்ற இடத்தில் நிசங்கர குருவையா ரெட்டி, சுபத்திரம்மா ஆகியோருக்குப் மகளாக பிறந்தார். சாவித்திரியின் இயற்பெயர் சசிகலா வாணி என்பதேயா கும்.

சிஸ்டாபூர்ணையா சாத்திரிகளிடம் இசை மற்றும் நடனம் பயின்றார். இளம் வயதிலேயே மேடைகளில் தோன்றி நடித்தார்.1952ஆம் ஆண்டு இவர் நடிகர் ஜெமினி கணேசனை மணந்தார். 19 மாதங்கள் கோமா என்னும் ஆழ்மயக்க நிலையில் இருந்த சாவித்திரி 1981 டிசம் பர் 26ஆம் நாள் இவ்வுலகை விட்டு பிரிந் தார். அப்போது அவருக்கு வயது 45. இந்திய அரசு அவரது நினைவாக 2011 ஆம் ஆண்டு நினைவுத் தபால் தலை ஒன் றையும் வெளியிட்டது.

**நடித்த தமிழ்த் திரைப்படங்கள்**

1951 – 1960 கல்யாணம் பண்ணிப்பார், (1952) தேவதாஸ், (1953) வஞ்சம் (1953) பரோபகாரம் (1953) மனம்போல் மாங்கல் யம் (1953) சுகம் எங்கே (1954) செல்லப் பிள்ளை (1955) குணசுந்தரி (1955) மாமன் மகள் (1955) மகேஸ்வரி (1955) மிஸ்ஸி யம்மா (1955) மாதர் குலமாணிக்கம் (1956) அமரதீபம் (1956) பெண்ணின் பெருமை (1956) யார் பையன் (1957) மாயா பஜார் (1957) மகாதேவி (1957) இரு சகோதரிகள் (1957) எங்கள் வீட்டுமகாலட்சுமி (1957) கற்புக்கரசி (1957) சௌபாக்கியவதி (1957) வணங்காமுடி (1957) காத்தவராயன் (1958) கடன் வாங்கி கல்யாணம் (1958) அன்னை யின் ஆணை (1958) திருமணம் (1958) பதிபக்தி (1958)பானைபிடித்தவள் பாக் கியசாலி (1958) களத்தூர் கண்ணம்மா (1960) குறவஞ்சி (1960) பாட்டாளி யின் வெற்றி (1960) புதியபாதை (1960) 1961 – 1970 எல்லாம் உனக்காக (1961) பாசமலர் (1961) பாவமன்னிப்பு (1961) பாதகாணிக்கை (1962) பார்த்தால் பசிதீ ரும் (1962) காத்திருந்த கண்கள் (1962) கொஞ்சும் சலங்கை (1962) படித்தால் மட்டும் போதுமா (1962) பந்தபாசம் (1962) வடிவுக்குவளைகாப்பு (1962) பரிசு (1963) கற்பகம் (1963) இரத்தத் திலகம் (1963) நவராத்திரி (1964) ஆயிரம் ரூபாய் (1964) கை கொடுத்ததெய்வம் (1964) கர்ணன் (1964) வேட்டைக்காரன் (1964) திருவிளையாடல் (1965) ஹலோமிஸ்டர் ஜமீன்தார் (1965) அண்ணாவின் ஆசை (1966) தட்டுங்கள் திறக்கப்படும் (1966) கந்தன் கருணை (1967) திருடாததிருடன் (1970) 1971 – 1980 பிராப்தம் (1971) ஜக்கம்மா (1972) இவர் கலைமாமணி விருதும் பெற்றவர் என்பதும் குறிப்பிடத் தக்கது.





**திலீப்குமார்**

திலீப்குமார் (Dilip Kumar) என்ற தனது திரைப்பெயரால் நன்கு அறியப்பட்ட வர் முகம்மது யூசுப் கான் (11.12.1922/ 7.7.2021) ஓர் இந்திய நடிகரும் திரைப் படத் தயாரிப்பாளரும் நன்கொடையாள ரும் ஆவார். இவர் முக்கியமாக, பாலிவுட் படங்களில் பணியாற்றியதற்காக மிகவும் பிரபலமானவர். இவர், 'சோகமாக நடிப் பதில் மன்னன்' என்று குறிப்பிடப்பட்டார். மேலும், ஹிந்தித் திரையுலகில் ஆதிக் கம் செலுத்திவரும் 'கான்' குடும்பத்தின் முன்னோடியாகவும் இருந்தார். நடிப்பு நுட்பத்தின் தனித்துவமான வடிவத்தை திரைப்படத்துக்கு கொண்டு வந்த பெருமை இவருக்கு கிடைத்தது. சிறந்த நடிகருக்கான பிலிம்பேர் விருதுகளை அதிகளவில் பெற்ற சாதனையை குமார் கொண்டிருந்தார்.





**திரை வாழ்க்கை**

பம்பாய் டாக்கீஸ் தயாரித்த 'ஜவார் பாட்டா' (1944) படத்தில் குமார் ஒரு நடிக ராக அறிமுகமானார். ஐந்து தசாப்தங்களாக நீடித்த ஒருவாழ்க்கையில், இவர் 65க்கும் மேற்பட்ட படங்களில் பணியாற்றினார். காதல் படமான 'அந்தாஸ்' (1949), ' ஆன்' (1952), சமூக நாடகமான 'தக்' (1952), தேவதாஸ் (1955), நகைச்சுவைப் படமான ஆசாத் (1955), காவிய வரலானாமுகல்இ அசாம் (1960), சமூக குற்றப் பின்னணிப் படமான 'கங்காயமுனா (1961), நகைச்சு வையான 'ராம் அவுர் ஷியாம்' (1967) உள் ளிட்ட பல படங்களில் நடித்துள்ளார். இவர் 1976ல் திரைத் துறையை விட்டு வெளியேறி ஐந்தாண்டு இடைவெளி எடுத்துக்கொண் டார். 1981ல் மீண்டும் திரும்பி கிராந்தி எனும் மாபெரும் வெற்றிப்படத்தில் குண சித்திரப் பாத்திரத்தில் நடித்தார். தொடர்ந்து சக்தி (1982), கர்மா (1986) சௌதாகர் (1991) போன்ற ஒருசில படங்களில் நடித் தார். 1998இல் கடைசியாக 'கியூலா' என்றப் படத்தில் நடித்தார்.

**மாநிலங்களவை உறுப்பினர்**

மகாராட்டிராவிலிருந்து 20002006 கால கட்டத்தில் இந்திய தேசிய காங்கிரஸ் கட் சியின் சார்பில் இந்திய நாடாளுமன்றத் தின் மாநிலங்களவை உறுப்பினராக திலீப் குமார் பரிந்துரைக்கப்பட்டார்.





**ஆரம்பகால வாழ்க்கை**

குமார் 1922 டிசம்பர் 11 அன்று பிரித்தா னிய இந்தியாவின் பெசாவரிலுள்ள கிஸ்ஸா கவானி பஜார் பகுதியில் உள்ள குடும்ப வீட்டில் லாலாகுலாம் சர்வார் கான் மற்றும் அவரது மனைவி ஆய்ஷாபேகம் ஆகியோ ரின் பன்னிரண்டு குழந்தைகளில் ஒருவரா கப் பிறந்தார். இவருக்கு முகமது யூசுப் கான் என்று பெயரிடப்பட்டது. இவரது தந்தை பெசாவரில் பழத்தோட்டங்களை வைத்தி ருந்தார். பின்னர் நாசிக் அருகே தியோலாலி யில் இருந்தார்.

முகமது யூசுப் கான் நாசிக்கின் தியோலாலி, பார்ன்ஸ் பள்ளியில் கல்வி பயின்றார். திரையுலகில் இவரது நெருங் கிய சகாவான நடிகர் ராஜ் கபூர் இவரது இளமைக்கால நண்பனாவார்.

**சொந்த வாழ்க்கை**

குமார், தன்னைவிட 22 வயது குறைந்த நடிகையான சாய்ரா பானுவை 1966ல் திருமணம் செய்துகொண்டார். இந்தத் திருமணம் 1983 ஜனவரியில் முடிந்தது.

**இறப்பு**

புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த இவர் 2021.7.7 அன்று மும்பையின் இந்துஜா மருத்துவமனையில் காலமா னார்.

**விருதுகள்**

குமார் தனது திரை வாழ்க்கையில் பல விருதுகள் பெற்றுள்ளார். அதில் மிகச் சிறந்த நடிகருக்காண பிலிம்பேர் விரு துகளை எட்டு முறை பெற்றுள்ளார். மேலும், 19 தடவை விருதுக்கு இவரது பெயர் முன்மொழியப்பட்டது.

1992ல் பிலிம்பேர் வாழ்நாள் சாதனை யாளர் விருதும் பெற்று கௌரவிக்கப் பட்டார். 1994ல் இந்திய அரசாங்கம் இந் தியாவில் திரைத்துறையில் முதன்மைச் சிறப்பிற்குத் தரப்படும் உயரிய விருதான தாதாசா கெப் பால்கே விருது அளித்து கௌரவித்தது. 1980ல் மும்பையின் ஷரிப்பாகவும் நியமிக்கப்பட்டார்.

1997ல் திலீப்குமாருக்கு பாகிஸ்தானின் குடிமக்களுக்கு வழங்கப்படும் விருதான, நிஷின்இபாகிஸ்தான் என்ற விருது வழங் கப்பட்டது.

1997 இல் இவர் என்டிஆர் தேசிய விருது பெற்றார். 2009ல் சிஎன்என்ஐ பிஎன் வருடத்தின் சிறந்த இந்தியர், வாழ்நாள் சாதனையாளர் விருது வழங் கப்பட்டது. இந்திய முஸ்லிம், இந்தித் திரைப்பட நடிகர்களில் பால்கே விருது பெற்றவர்.

எஸ்.நடராஜ்













# இளையோர் உலகக் கிண்ணத்தில் 15 பேர் இலங்கை குழாத்திற்கு தலைவரானார் சினத்

## ஜனவரி 21இல் சிம்பாப்வேயுடன் முதல் போட்டி

தென்னாபிரிக்காவில் எதிர்வரும் ஜனவரி 19 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள 19 வயதுக்கு உட்பட்ட உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான 15 பேர் கொண்ட இலங்கை குழாம் தேர்வு செய்யப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

அதன்படி இலங்கை இளையோர் குழாத்தின் தலைமை பொறுப்பு கடந்த ஆசிய கிண்ண தொடர்பில் தலைமை வகித்த சினத் ஜயவர்தனவிடம் வழங்கப்பட்டிருப்பதோடு, உப தலைமை பொறுப்பு மல்ஷ தருபத்திக்கு கிடைத்துள்ளது.

கடந்த இளையோர் ஆசிய கிண்ணத் தொடரில் பங்கேற்ற தினுக்க தென்னகோன் இந்தத் தொடரில் மேலதிக வீரராக இணைக்கப்பட்டிருப்பதோடு 15 பேர் கொண்ட குழாத்துக்கு சுபுன் வாத்துகே சேர்க்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.



எவ்வாறாயினும் இம்முறை தொடர் இலங்கையில் நடத்த திட்டமிடப்பட்டிருந்தபோதும் இலங்கை கிரிக்கெட் மீது விதிக்கப்பட்ட ஐ.சி.சி. தடையினால் இந்தத் தொடர் தென்னாபிரிக்காவுக்கு மாற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதில் மூன்று குழுக்களாக நடைபெறும் போட்டிகளில் எதிர்வரும் ஜனவரி 21 ஆம் திகதி இலங்கை இளையோர் அணி சிம்பாப்வே இளையோர் அணியை எதிர்கொள்ளவுள்ளது. தொடர்ந்து 24 ஆம் திகதி நமீபிய அணிக்கு எதிராகவும் 28 ஆம் திகதி அவுஸ்திரேலிய அணிக்கு எதிராகவும் இலங்கை இளையோர்கள் ஆரம்ப சுற்றில் ஆடவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து இந்த மூன்று அணிகளில் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் சுப்பர் 6 சுற்றுக்கு தகுதி பெறவுள்ளன.

மேலும் 17 நாட்களில் ஆரம்பமாகவுள்ள இளையோர் உலகக் கிண்ணத் தொடரின் ஆரம்பச் சுற்றுப் போட்டிகள் ஜனவரி 28 ஆம் திகதி நிறைவடைவதோடு, சுப்பர் 6 சுற்றுப் போட்டிகள் பெப்ரவரி 3 ஆம் திகதி வரையும், அரையிறுதிப் போட்டிகள் பெப்ரவரி 6 மற்றும் 8 ஆம் திகதிகளிலும் நடைபெறவிருப்பதோடு இறுதிப் போட்டி பெப்ரவரி 11 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இலங்கை இளையோர் குழாம்

சினெத் ஜயவர்தன (தலைவர் கொழும்பு றோயல்), மல்ஷ தருபத்தி (உப தலைவர் ரிச்மண்ட்), துவிது ரணதுங்க (மஹாநாம), தினுர களுபஹன (மஹிந்த), விஷ்வ லஹிரு (பாணந்துறை ஸ்ரீ சுமங்கல), விஷேன் ஹலம்பகே, ருசந்த கமகே (பம்பலப்பிட்டி புனித பீட்டர்), விஹஸ் தெவ்மிக்க (தர்ஸ்டன்), கருக சங்கேத் (வத்தலை லைசியம்), புலிந்து பெரேரா (கண்டி தர்மராஜ), ரவிஷான் நெத்சர (அம்பலாங்கொடை பீ.டி.எஸ். குலரத்ன), ருவிஷான் பெரேரா (கொழும்பு ஆனந்த), சுபுன் வாதுகே (திரித்துவ), ஷருஜன் ஷன்முகநாதன் (புனித பெனடிக்ஸ்), ஹிருன் கப்புருபண்டார (புனித ஜோசப்), மேலதிக வீரர்கள் மனுல குலரத்ன, தினுக தென்னகோன் (திருத்துவ), ஹிரான் ஜயசுந்தர (புனித ஜோசப்)

# ஒருநாள் போட்டிகளிலும் டேவிட் வோர்னர் ஓய்வு

தனது கடைசி டெஸ்ட் தொடரில் ஆடிவரும் அவுஸ்திரேலிய ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் டேவிட் வோர்னர் ஒருநாள் சர்வதேச போட்டிகளில் இருந்தும் ஓய்வை அறிவித்துள்ளார்.

பாகிஸ்தானுக்கு எதிராக தற்போது நடைபெற்று வரும் டெஸ்ட் தொடருடன் 37 வயது வோர்னர் ஓய்வுபெறவுள்ள நிலையில் ஒருநாள் போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெறப்போவதாக நேற்று (01) குறிப்பிட்டுள்ளார். இதன்படி டெஸ்டுடன் சேர்த்து ஒருநாள் போட்டிகளிலும் ஓய்வு பெறுவதாக கூறினார்.

நான் நிச்சயமாக ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் இருந்தும் ஓய்வுபெறுகின்றேன் என டேவிட் வோர்னர் தெரிவித்துள்ளார். உலகக் கிண்ணப் போட்டிகளின் போது அதனை நான் தொடர்ச்சியாக தெரிவித்து வந்துள்ளேன். இந்தியாவில் உலக கிண்ணத்தை வென்றது மிகப்பெரிய சாதனை என அவர் கூறினார்.

பாகிஸ்தானுக்கு எதிரான சிட்னியில் நாளை (03) ஆரம்பமாகும் மூன்றாவது டெஸ்ட் போட்டியே வோர்னரின் கடைசி டெஸ்ட் ஆட்டமாக அமையவுள்ளது.

இதுவரை 161 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் ஆடியிருக்கும் வோர்னர் மொத்தம் 6,932 ஓட்டங்களை பெற்றிருப்பதோடு ஒருநாள் வரலாற்றில் அதிக ஓட்டங்களை பெற்ற ஆஸி. வீரர்கள் வரிசையில் அவர் ஆறாவது இடத்தில் உள்ளார்.

எனினும் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஒருநாள் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் அணிக்கு தாம் அழைக்கப்பட்டால் விளையாடுவதற்கான வாய்ப்பை அவர் மறுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# முடி துறக்கிறார் டென்மார்க் ராணி

டென்மார்க் மகாராணி இரண்டாம் மார்கிரேட் 52 ஆண்டுகளுக்குப் பின் முடி துறக்கவுள்ளார்.

அவர் எதிர்வரும் ஜனவரி 14ஆம் திகதி மாகாராணி பொறுப்பிலிருந்து விலகுவதாகக் கூறியுள்ளார். அவருக்குப் பதிலாக அவரது மகன் பட்டத்து இளவரசர் ஃப்ரெடரிக் அரசர் பொறுப்பை ஏற்கவுள்ளார்.

மார்கிரெட் மகாராணியின் தந்தை மறைந்த பின்னர் அவர் 1972ஆம் ஆண்டு ஜனவரி 14ஆம் திகதி முடி சூடிக்கொண்டார். “இதுவே சிறந்த தருணம் என்பதால் இந்த முடிவெடுத்துள்ளேன். டென்மார்க்கின் மகாராணி பொறுப்பிலிருந்து விலகுகிறேன்” என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.



83 வயதான மார்கிரெட் உலகில் பதவியில் இருக்கும் ஒரே மகாராணி மற்றும் ஐரோப்பாவில் நீண்ட காலம் பதவி வகிப்பவராகவும் இருந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாதுகாப்புச் சபையில் ஐந்து புதிய நாடுகள்



ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைக்கு புதிதாக தேர்வு செய்யப்பட்டிருக்கும் ஐந்து நாடுகள் தமது இரண்டு ஆண்டு தவணைக் காலத்தை 2024 புத்தாண்டுடன் ஆரம்பித்துள்ளன.

பாதுகாப்புச் சபையில் ஐந்து நிரந்தர அங்கத்துவ நாடுகளுடன் சுழற்சி முறையில் மேலும் பத்து நாடுகள் இடம்பெற்றுள்ளன. இதில் அல்ஜீரியா, கயானா, சியரலியோன், ஸ்லோவேனியா, தென்கொரிய நாடுகள் புதிதாக இணைந்துள்ளன.

இதில் கடந்த டிசம்பர் மாதம் காசாவில் மனிதாபிமான போர் நிறுத்தம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்து தீர்மானம் கொண்டுவந்த ஐக்கிய அரபு இராச்சியமும் பாதுகாப்புச் சபையில் இருந்து வெளியேறியுள்ளது. இந்தத் தீர்மானத்திற்கு அமெரிக்கா வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி இருந்தது.

## சர்வதேச செய்திகள்

# ஜப்பானில் சக்தி வாய்ந்த பூகம்பத்தை அடுத்து சுனாமி தாக்கியது: கட்டடங்கள் இடிந்து சேதம்

ஜப்பானின் மத்திய பகுதியில் நேற்று (01) சக்தி வாய்ந்த பூகம்பம் ஏற்பட்டதை அடுத்து நாட்டின் கடற்கரை பகுதிகளை சுனாமி தாக்கியுள்ளது. இதனால் ஆயிரக்கணக்கான வீடுகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு விமான மற்றும் ரயில் சேவைகள் ஸ்தம்பித்துள்ளன.

7.6 ரிச்டர் அளவில் இடம்பெற்ற இந்த பூகம்கம் காரணமாக ஆரம்பத்தில் சுமார் 1 மீற்றர் உயரமான சுனாமி அலை கடற்கரைகளைத் தாக்கிய நிலையில் மேலும் பாரிய சுனாமி ஒன்று ஏற்படுவது பற்றி எச்சரிக்கப்பட்டிருந்தது.

ஜப்பானின் கடலோர மாகாணங்களான இஷிகாவா, நிகாடா மற்றும் டொயாமாவில் தீவிர சுனாமி எச்சரிக்கையை ஜப்பான் வானிலை ஆய்வு நிறுவனம் விடுத்தது. ரஷ்யாவும் தனது தூர கிழக்கு நகரங்களான விளாடிவொஸ்டொக் மற்றும் நிகொட்காவில் சுனாமி எச்சரிக்கை விடுத்திருந்தது.

”உங்கள் உடைமைகளும் வீடுகளும் எவ்வளவு மதிப்புமிக்கவை என்பதை அறிவோம். ஆனால் உங்கள் உயிர் அதைவிட முக்கியம். உயரமான இடத்துக்கு உடனடியாக ஓடுங்கள்,” என்று என்.எச்.கே தொலைக்காட்சியில் மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இஷிகாவா மாகாணத்தில் நோட்டோ பிராந்தியத்தை தாக்கிய சக்திவாய்ந்த பூகம்பத்தைத் தொடர்ந்து மூன்று மணி நேரத்தில் 30க்கும் அதிகமான தடவைகள் நில அதிர்வுகள் ஏற்பட்டிருப்பதோடு அதில் சில 4.0 அளவு சக்தி வாய்ந்ததாக இருந்தது என்று ஜப்பான் காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.



இந்த பூகம்பத்தால் ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பில் மதிப்பீடு செய்து வருவதாக ஜப்பான் அரசு குறிப்பட்டது. எனினும் பூகம்பம் மையம் பெற்றிருந்த டொயாமா, இஷிகாவா மற்றும் நிகாடா பகுதிகளில் சுமார் 33,500 வீடுகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருப்பதாக உள்ளூர் பயனாளர்களை மேற்கோள் காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

விஜிமா நகரில் கட்டடம் ஒன்று தீப்பற்றி எரியும் காட்சியை தொலைக்காட்சி செய்திகள் வெளியிட்டதோடு மத்திய டோக்கியோவிலும் வீடுகள் அதிர்ந்ததாக கூறப்படுகிறது.

பூகம்ப மையப் பகுதிகளில் உள்ள பல அதிகவேகப் பாதைகள் மூடப்பட்டதாக ஜப்பானின் வீதி நிர்வாகம் தெரிவித்தது. டோக்கியோ மற்றும் மையப் பகுதியான நோட்டோ இடையிலான ஷின்கன்சன் புல்லட் ரயில் சேவைகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

இஷியாவில் உள்ள ஷிகா அணு மின் நிலையம் அல்லது மற்ற அணு மின் நிலைகளில் இருந்து எந்த ஒரு அசாதாரண நிலைகளும் பதிவாகவில்லை என்று அரச பேச்சாளர் யொஷிமாசா ஹயாஷி குறிப்பிட்டுள்ளார்.

ஜப்பானில் நிலநடுக்கம் வழக்கமான ஒன்று என்பதால் கட்டடங்கள் பெரும்பாலும் அதைத் தாங்கக்கூடிய வகையில் கட்டப்படுகின்றன. கட்டுமான விதிமுறைகள் ஜப்பானில் மிகவும் கெடுபிடியாகக் கடைப்பிடிக்கப்படுகின்றன. அவசரகாலத்தில் என்ன செய்ய வேண்டும் என்பதற்கு ஜப்பான் முழுவதும் பயிற்சிகள் வழங்கப்படுவதும் வழக்கமாகும்.

எனினும் கடந்த 2011 மார்ச் மாதத்தில் வடகிழக்கு ஜப்பானுக்கு அப்பால் கடலுக்கடியில் ஏற்பட்ட 9.0 ரிச்டர் அளவு பாரிய பூகம்பத்தில் ஏற்பட்ட சுனாமி அலையில் சுமார் 18,500 பேர் கொல்லப்பட்டு அல்லது காணாமல்போயினர். இந்த அனர்த்தத்தின்போது ஏற்பட்ட அணு உலை பாதிப்பு தீவிர அணு விபத்துக்கு காரணமானது.

2022 மார்ச் மாதத்தில் புக்குஷிமாவின் கடற்கரைக்கு அப்பால் ஏற்பட்ட 7.4 ரிச்டர் பூகம்பத்தில் மூவர் கொல்லப்பட்டனர்.

# காசாவில் 2024 முழுவதும் போரை தொடர இஸ்ரேலிய இராணுவம் புத்தாண்டுச் செய்தி

## ஹமாஸ் ரொக்கெட் குண்டுகளுடன் புத்தாண்டு ஆரம்பம்

காசாவில் இருந்து வீசப்பட்ட சரமாரி ரொக்கெட் தாக்குதல்களுடன் நள்ளிரவில் இஸ்ரேலில் புத்தாண்டு ஆரம்பமானதோடு இஸ்ரேலிய தாக்குதல்களில் மேலும் பல பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

2024 ஆம் ஆண்டு ஆரம்பிக்கும் தருணத்தில் இஸ்ரேலின் பல இடங்களில் சைரன் எச்சரிக்கை ஒலி பிறப்பிக்கப்பட்டதோடு டெல் அவிவில் உள்ள ஏவுகணை பாதுகாப்பு அமைப்பு ரொக்கெட் குண்டுகளை இடைமறித்ததை காண முடிந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன்போது சிலர் பாதுகாப்பான இடங்களை நோக்கி ஓட்டம்பிடித்ததோடு மேலும் சிலர் தமது புத்தாண்டு கொண்டாட்டங்களை தொடர்ந்து நடத்தியுள்ளனர்.

“நாம் அனைவரும் அச்சத்தால் ஓரமாக ஒதுங்கினோம். எனது இதயம் படபடத்தது.” என்று இந்த ரொக்கெட் குண்டுகள் தொடர்பில் மதுபான விடுதி ஒன்றுக்கு முன்னால் இருந்த 26 வயது கப்ரியேல் செமல்மன் குறிப்பிட்டார்.

“அது பயங்கரமானது. நாங்கள் எவ்வாறான ஒரு வாழ்வை வாழ்கிறோம் என்பதை உங்களால் பார்க்க முடியும்” என்றும் அவர் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலுக்கு பொறுப்பேற்று வீடியோ ஒன்றை வெளியிட்ட ஹமாஸ் ஆயுதப் பிரிவான இஸதீன் அல் கஸ்ஸாம் படை, இஸ்ரேலினால் மேற்கொள்ளப்பட்ட பொதுமக்கள் மீதான இனப்படுகொலைக்கு பதிலடியாக எம்90 ரொக்கெட்டுகளை வீசியதாக தெரிவித்தது.

இந்தத் தாக்குதல்களை இஸ்ரேல் இராணுவம் உறுதி செய்ததோடு, இதனால் எந்த ஒரு பாதிப்பும் ஏற்படவில்லை என்று ஆரம்பக் கட்ட செய்திகள் குறிப்பிட்டன.

மறுபுறம் காசா மீதான இஸ்ரேலின் வான், கடல் மற்றும் தரை மார்க்கமான தாக்குதல்கள் புத்தாண்டிலும் தொடர்ந்து நீடித்தது. நேற்று அதிகாலையில் இடம்பெற்ற தாக்குதல்களில் குறைந்தது 48 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மூன்று மாதங்களை நெருங்கும் இந்தப் போரில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 21,822 ஆக அதிகரித்துள்ளது. இதில் பெரும்பாலானவர்கள் சிறுவர்கள் மற்றும் பெண்களாவர்.



இந்நிலையில் 2024 ஆம் ஆண்டு முழுவதும் காசாவில் போரைத் தொடர எதிர்பார்ப்பதாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது. இஸ்ரேலிய பாதுகாப்பு படைகளின் பேச்சாளர் டனியேல் ஹகரி வெளியிட்ட புத்தாண்டு செய்தியில், நீடித்த போர் ஒன்றுக்கு தயாராகும் வகையில் துருப்புகள் நிலைநிறுத்தப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளார்.

சில துருப்புகள் குறிப்பாக மேலதிக படையினர் மீள இணையும் வகையில் வாபஸ் பெறப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். “2024 ஆம் ஆண்டு போரைத் தொடர்வதற்கான திட்டமிடல் மற்றும் தயார்படுத்தலை உறுதி செய்யும் நோக்கில் இந்த மாற்றம் செய்யப்படுகிறது. மேலதிக நடவடிக்கைகள் மற்றும் ஆண்டு முழுவதும் சண்டை நீடிக்கும் என்பதை புரிந்து இஸ்ரேலிய இராணுவம் திட்டத்தை முன்னெடுக்கும்” என்று அவர் குறிப்பிட்டார். காசாவில் உள்ள 2.3 மில்லியன் மக்கள் தொகையில் கிட்டத்தட்ட அனைவரும் போல் தமது வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

“இன்று உலகெங்கும் வாணவேடிக்கைகள் மற்றும் கொண்டாட்டங்களை காணமுடிகிறது. காசாவில் எமது வான் இஸ்ரேலிய ஏவுகணைகள் மற்றும் ஷெல் குண்டுகளால் நிரம்பி, வீடற்ற அப்பாவி பொதுமக்கள் மீது விழுகின்றன” என்று வடக்கு காசா குடியிருப்பாளரும் தற்போது ரபாவில் அடைக்கலம் பெற்றிருப்பவருமான 57 வயது செய்னப் கலீல் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜனவரி மாதம் 2ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.